பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 05 திங்கட்கிழமை 18.01.2021 கதிர் 74

## இது ரகசியம் அல்ல!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளுக்கு, இலங்கை விவகாரத்தில் தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கட்சிகள், தரப்புகள் ஓர் ஆவணமாகத் தயாரித்து அனுப்பிவிட்டன. பக்கம்02

# குருந்தூர்மலையில் வெடித்தது சர்ச்சை; நேற்று அங்கு தமிழ் எம்.பிக்கள் பயணம்

## ஊடகவியலாளர்களைத் தடுத்து நிறுத்தியது பொலிஸ்





முல்லைத்தீவு மாவட்டத்தின் தொன்மையான கிராமங்களில் ஒன்றாகிய குருந்தூர்மலையில் புராதன சிவன் ஆலயம்இருந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்து புதிய கட்டுமாணம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியமையையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் பக்கம் 02



# போர்க்குற்றச்சாட்டுக்கு கோட்டாவே பொறுப்பு!



## சஜித் அணி குற்றச்சாட்டு

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டும் என்று சஜித் அணி வலியுறுத்தியுள்ளது.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். பக்கம் 02

## நீர்கொழும்பில் கூட்டுறவு ஊழியர் 38 பேருக்கு தொற்று

நீர்கொழும்பில் உள்ள பல்நோக்க கூட்டுறவு தலைமையலுவலக (CO- OP) ஊழியர்கள் 38 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பல்நோக்கு கூட்டுறவு ஊழியர்கள் 140 பேரிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை வெளியாகிய நிலையிலேயே அவர்களில் 38 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

12 பொது சந்தேக நபர்கள் இருக்கின்றனர் எனவும், அவர்கள் மீது மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்படும் என்றும் தலைமை பொது சுகாதார ஆய்வாளர் என்.கே.யூ.கே குணரத்ன தெரிவித்துள்ளார்.

## பருத்தித்துறையில் மாஸ்டருக்கு 'சீல்'!

பருத்தித்துறையில் சுகாதார துறையின் அறிவுறுத்தல்களையும் நடைமுறைகளையும் பின்பற்றாத திரையரங்குக்கு சீல் வைக்கப்பட்டது.



பருத்தித்துறை பகுதியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் முன்னனுமதி பெறாது, கொரோனா கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காது, பருத்தித்துறை பகுதியில் பக்கம் 02

### ஐ.நாவின் புதிய பிரேரணைக்கு

## இணை அனுசரணை வழங்க அரசு மறுப்பு!

UNHRC

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் எதிர்வரும் 46ஆவது அமர்வின்போது கொண்டுவரப்படவுள்ள இலங்கை தொடர்பான புதிய பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்க இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கை பக்கம் 11

## வடக்கில் எண்மருக்கு நேற்றுக் கொரோனா!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 8 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பக்கம் 02

### மேலும் 8 பேர் பலியெடுப்பு

## கொரோனா மரணம் 264 ஆக அதிகரிப்பு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொலனறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய ஆண் ஒருவரும், கொழும்பு - 08 ஐச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் பக்கம் 02

## பிரச்சினைகளை வேறுபடுத்தினால் அது முரண்பாட்டுக்கே வழிவகுக்கும்



### சஜித் பகிரங்க எச்சரிக்கை

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் தேசிய பிரச்சினைகளாகவே கருதுவேன். பிரச்சினைகளை ஒருபோதும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது. அது முரண்பாட்டுக்கே வழிவகுக்கும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மொனராகலை – புத்தள ஒக்கம்பிடிய பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற 'எதிர்க்கட்சியின் நடமாடும் சேவை' கூட்டத்தில் பக்கம் 02

## நேற்றும் 749 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 749 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 53 ஆயிரத்து 62 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 49 ஆயிரத்து 274 பேருக்கு கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் வைரஸ் தொற்றியுள்ளது. பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து நாம் பெருமைப்படலாம்.

ஏதோ தமிழர் தரப்புகள் எல்லாம் ஒன்றுபட்டு அனுப்பி விட்டன என்று வெளியில் கூறினாலும் உள்ளே நடைபெற்ற குடுமிப் பிடிச் சண்டை மிக மோசம்.

ஒரு புறம் சம்பந்தன் – சுமந்திரன் மற்றும் கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள். மறுபுறம் கஜேந்திரன்கள். இன்னொரு புறம் நீதியரசர் விக்னேஸ்வரனுடன் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் தலைவர்கள். எல்லோரும் மலை போல ஆளுமைகள். தங்களின் கொள்கைக் கோட்பாட்டு நிலைப்பாடுகளில் 'பிடிச் சுராவிகள்'. இளகிக் கொடுக்க இணங்காத இரும்புகள்.

அப்படியிருந்தும் அவர்கள் ஒன்றுபட்டு ஒரு தீர்மானத்துக்கு – நிலைப்பாட்டுக்கு – வர முடிந்திருக்கின்றது என்றால் அந்த முயற்சிக்கு பிள்ளையார் சுழி போட்டதிலிருந்து இறுதி ஆவணத்தில் ஒப்பமிடும் வரை பின்புலத்தில் நேரடியாகவும், தோன்றாத் துணையுமிருந்த பல பிரமுகர்களின் அயராத – தளராத – சோர்ந்து போகாத – முயற்சிகள்தான் காரணம். அவர்களில் பலரைத் தெரியும். எனினும் பெயர் குறிப்பிட்டு நான் இங்கு விவரிக்கவில்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் தமிழினம் நன்றியுடையது

இதை ஒட்டிய குடுமிப்பிடிச் சண்டை தரப்புகளுக்கு – கட்சிக் கட்டமைப்புகளுக்கு – இடையில் மட்டுமல்ல. கூட்டுகளுக்கு உள்ளேயும் கூட.

பொதுவாக இத்தகைய விவகாரங்களில் தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்குள்தான் சில்லெடுப்புகள் அதிகம் இருக்கும். ஊடகங்களில் அதிகம் பேசப்படும். ஆனால் இம்முறை அப்படியல்ல. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியினர் எல்லோருமே தமது பிரதிநிதியான சுமந்திரனுடன் ஒத்துப் போயினர். அல்லது உள்வீட்டு முரண்பாட்டுச் சமாச்சாரத்தை வெளியே தெரியாமல் உள்ளேயே தீர்த்துக் கொண்டனரோ தெரியவில்லை. வெளியே பெரிய முரண்பாட்டு அசுமாத்தம் ஏதுமில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலும் வழமை போல இரட்டை நிலைப்பாடு ஏதுமில்லை. ஒரே குரல். அது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினுடையது மட்டும்தான்.

ஆனால், ஒரேயொரு எம்.பியை மட்டும் வைத்திருக்கின்ற – நான்கு கட்சிக் கூட்டான – தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்குள்தான் குழப்பம். ஆனால் அதுவும் வெளியே அதிகம் தெரியாத முரண்பாடு.

இறுதி ஆவணத்தில் அரசியல் கட்சிகள் சார்பில் மூன்று கூட்டுக்களினதும் – அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்றினதும் – தலைவர்கள் மட்டுமே ஒப்பமிடுவது என்ற தீர்மானம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் முன்வைக்கப்பட்டது. கூட்டமைப்பு சார்பில் சுமந்திரன் இணங்கினார். விக்னேஸ்வரனும் உடன்பட்டார்.

இது தொடர்பான தொடர்பாடல்கள் யாவும் மின்னஞ்சல் பரிமாற்றத்திலேயே இடம்பெற்றன. மாறி மாறி கடிதங்கள் பரிமாறப்பட்டன. எல்லாக் கடிதங்களும் ஒரே சமயத்தில் பலருக்கும் பிரதியிடப்பட்டன.

அப்படி இறுதி ஆவணத்தில் மூன்று கூட்டுக்களின் தலைவர்கள் மட்டுமே ஒப்பமிடுவது, அதில் சம்பந்தனின் ஒப்பம் முதலாவதாக அமைய வேண்டும் என்ற ஏற்பாடுகளுக்கு தாங்கள் முற்கூட்டியே இணங்கவில்லை என்று தெரிவித்து, அந்தத் தகவலை விக்னேஸ்வரன் எம்.பி. உட்பட சம்பந்தப்பட்ட யாரேனும் சவாலுக்கு உட்படுத்துவாராயின் அதற்கான மின்னஞ்சல் ஆதாரங்களை என்னாலேயே பெற்று முன்வைக்க முடியும் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அப்படியே மூவரும் – அதாவது சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விக்னேஸ்வரன் ஆகிய மூவரும் – ஏனைய பொது அமைப்பினர், மதத் தலைவர்கள் சேர்ந்து ஒப்பமிட்டு அந்தக் கடிதத்தை 47 உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பிய பிறகு புதிய சர்ச்சை ஒன்றை விக்னேஸ்வரன் கிளப்பியிருக்கின்றார் என அறியவருகின்றது.

மேற்படி உறுப்புநாடுகளுக்கு அனுப்புவதற்கான கடிதத்தில் தலைவர்கள் கையெழுத்திடுவதற்காகக் காலக்கெடு ஒன்று பேசி ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் அந்த ஆவணத்தின் பிரதியில் தாம் மட்டும் கையயழுத்திட்டு ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி வைத்த விக்னேஸ்வரன், காலக்கெடு முடிந்த பின்னர் – யாருமே கோராத நிலையில் – ஆவணத்தின் இன்னொரு பிரதியை எடுத்து, அதில் தமது கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் ஒப்பங்களை கட்சிப் பெயரடங்கிய முத்திரைகளுடன் பெற்று, தாமும் ஒப்பமிட்டு சுமந்திரனுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார். (அதில் அவரது கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சுரேஷ் பிறேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா, அனந்தி சசிதரன் ஆகியோர் ஒப்பமிட்டிருந்தனர்.)

சுமந்திரனுக்கு அதனை அனுப்பி வைத்திருந்தமை மட்டுமல்ல, 'விடிய விடிய இராமாயணம், விடிந்த பின்னர் சீதைக்கு இராமன் என்ன முறை என்று கேட்டமாதிரி' ஒரு கேள்வியை அடுத்த நாள் கிளப்பியிருக்கின்றார் – மின் அஞ்சல் மூலம்.

ஒன்றும் தெரியாதவர் போல, வெளியிடப்பட்ட ஆவணத்தில் எனது கூட்டணித் தலைவர்களின் கையொப்பத்தை நீங்கள் சேர்த்துக் கொள்ளாமை ஏன் என்று மின்னஞ்சலில் சுமந்திரனிடம் அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றமை தான் விந்தை. இப்படிக் கேள்வி எழுப்பி சுமந்திரனுக்கு தான் அனுப்பிய மின் அஞ்சலின் பிரதிகளை தமது கூட்டணியின் பங்காளிக் கட்சியினருக்கும் அவர் அனுப்பி வைத்திருப்பார் போலும். – அதன் மூலம், மூல ஆவணத்தில் அவரின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் ஒப்பம் சேர்க்கப்படாமைக்குத் தாம் காரணமல்லர், சுமந்திரன்தான் என்று குற்றச்சாட்டை சுமந்திரன் மீது போடும் எத்தனம் போல தோன்றுகின்றது.

மூன்று கூட்டுக்களினதும் தலைவர்களான சம்பந்தன், கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் ஆகியோர் மட்டுமே அரசியல் கட்சிகள் சார்பில் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவது என்ற இணக்கத்துக்கு தாமும் வந்த பின்னர், தனது பங்காளிக் கட்சித் தலைவர்களின் ஒப்பத்தை – அதுவும் காலக்கெடு முடிந்த பின்னர் பெற்று – விக்னேஸ்வரன் அனுப்பும் தேவை ஏன் அவருக்கு எழுந்தது?

1.தாம் மட்டுமே தமது கூட்டணியின் சார்பில் ஒப்பமிடும் இணக்கத்துக்கு மற்றைய தலைவர்களுடன் தாம் ஏற்கனவே வந்துவிட்டார் என்ற உண்மையை தமது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு அவர் கூறவில்லையா?

2.அதை மறைத்து, கடைசி வரையில் அவர்களும் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவர் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு விக்னேஸ்வரன் வழங்கினாரா?

3. இறுதியில் தமது தவறை சுமந்திரன் மீது சுமத்தி தாம் தப்பு துவதற்கு அவர் முயன்றாரா?

இந்தச் சந்தேகங்களை நீக்குவது நீதியரசர் விக்னேஸ்வரனின் பொறுப்பு.

தேவைப்பட்டால், இது தொடர்பில் அவர் ஆவணத்தில் ஒப்பமிடும் வரை இடம் பெற்ற ஊடாட்டங்களை காலக்கிரமப்படி நேரவரிசையோடு, மின்னஞ்சல் தகவல் குறிப்புகளோடு, ஒழுங்குபடுத்தி எம்மால் வெளியிட முடியும்.

வாசகர்களும் அவர் பதிலை எதிர்பார்ப்பார்கள் என்று நினைக்கிறேன். அதைப் பிரசுரிக்க நாம் தயாராக இருக்கிறோம்.

– மின்னல் –

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இயங்கிய திரையரங்கு பருத்தித்துறை சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன்

றொனால்ட் தலைமையிலான குழுவினரால் பருத்தித்துறை பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சீல் வைக்கப்பட்டது.

பருத்தித்துறைப்பகுதியில் அண்மையில் இரண்டு கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு அவர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்த இருபத்தைந்துக்கு மேற்பட்டவர்கள் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.

அவர்களுக்கான பி.சி.ஆர். முடிவுகள் இன்னும் கிடைக்கப்பெறாத நிலையில் திங்கட்கிழமை வரை திரையரங்கை பருத்தித்துறையில் திறக்கவேண்டாமென மாகாண சுகாதார பணிப்பாளரின் ஆலோசனைபெற்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியாலும் பொதுசுகாதார பரிசோதகராலும் அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் அதனை மீறி நேற்று சனிக்கிழமை 'மாஸ்டர்' திரைப்படம் இரவு 9.30 காட்சி நடத்தப்பட்டுள்ளதோடு அங்கு சமூக இடைவெளியைப் பேணாமலும் முகக் கவசங்களை சரியாக அணியாமலும் பெருமளவான மக்களை ஆபத்தான நிலையில் ஒன்றுகூட இடமளித்ததாகத் தெரிவித்து திரையரங்கு சீல் வைக்கப்பட்டது

## போர்க்குற்றச்சாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

நாட்டின் ஜனாதிபதியானவர் ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை மதிப்பவராக இருக்க வேண்டும். மாறாக சர்வாதிகாரப் போக்கில் பயணிப்பவராகவும் பாசிசவாதியாகவும் இருக்கக்கூடாது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராகவும் – பாசிசவாத கொள்கைக்கு எதிராகவும் நாம் ஓரணியில் திரண்டு போராடுவோம். இந்த அரசை வீழ்த்தும் வரைக்கும் எமது போராட்டம் தொடரும்.

முப்பது வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டுப் போரை வெற்றி கொண்ட பெருமை 90 வீதம் அப்போதைய இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவையே சாரும். அரசியல் ரீதியாக அப்போதைய ஜனாதிபதியான இந்நாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்களிப்பும் காணப்பட்டது.

ஆனால், இறுதிக்கட்டப் போரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த இந்நாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் விமர்சனங்களுக்குரியதாகவே இருந்தன. எனவே, இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் – என்றார்.

## வடக்கில் எண்மருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 420 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. அதில் வடக்கு மாகாணத்தில் 8 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா 3 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது – என்றார்.

## கொரோனா மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவரும், உடுதும் பறை பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 87 வயதுடைய ஆண் ஒருவரும், தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி உடப்புசல்லாவை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி கொலன்னாவ பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 264 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 251 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர்.

## நேற்றும் 749...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்தத் தொற்றாளர்களில் 45 ஆயிரத்து 171 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 7 ஆயிரத்து 627 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரசதகவல்திணைக்களம் அறிவித்துள்ளது.

## பிரச்சினைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: –

எதிர்க்கட்சியின் செயற்பாடு முரண்பாடுகளை ஏற்படுத்துவது என அநேகமானோர் கருதுகின்றார்கள். வரலாற்றில் இதுவரை காலமும் செயற்பட்ட எதிர்க் கட்சிகளைக் கருத்தில்கொண்டு அவர்கள் அவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளார்கள். இருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி மாறுப்பட்ட எதிர்க் கட்சியாகச் செயற்படும்.

அரசின் தவறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். சிறிய எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு நாடு தழுவிய ரீதியில் ஜனநாயகத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும். பிரச்சினைகளை ஏற்படுத்தி தவறான வழியில் இலக்கை அடைவது எதிர்க்கட்சியின் செயற்பாடல்ல.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எதிர்க்கட்சியாகச் செயற்பட்டும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். மக்களின் பிரச்சினைகளைப் பகிரங்கப்படுத்தி அதனை உயர்மட்ட அரசியல் வரை எம்மால் கொண்டு செல்ல முடியும்.

நாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி கவனம் செலுத்தும். அரசின் அனைத்துச் செயற்பாடுகளையும் எதிர்க்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

தேசிய பிரச்சினை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும், ஏனைய பிரச்சினை குறித்து ஏனையோர் பேச வேண்டும் என அரசியல் களத்தின் பிரதிவாதிகள் தெரிவிக்கின்றார்கள்.

நாட்டு மக்களின் பிரச்சினைகளை தேசிய பிரச்சினை என்ற கோணத்திலேயே நான் பார்ப்பேன். தேசிய பிரச்சினை, மாகாண பிரச்சினை, மாவட்ட பிரச்சினை, பிரதேச பிரச்சினை என்ற வேறுபாடுகள் ஏதும் கிடையாது.

மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அவற்றில் அடிப்படைப் பிரச்சினைகள், தேசிய பிரச்சினைகள் என்று ஏற்றத்தாழ்வுகள் பார்த்தால் முரண்பாடுகள் மாத்திரமே மிகுதியாகும். நாம் மக்கள் மத்தியில் செல்லும்போது அவர்கள் தங்களின் பிரச்சினைகளைக் கூறுகின்றார்கள். அதிகாரம் இல்லாவிடினும் எம்மால் ஒரு தீர்வைப் பெற்றுத்தர முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆகவே, மக்களின் அடிப்படைப்

பிரச்சினைகளையும் தேசிய பிரச்சினைகளாகவே கருதுவேன். பிரச்சினைகளை ஒருபோதும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது – என்றார்.

## குருந்தூர்மலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னணி ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பவ இடத்துக்கு நேற்று மாலை பெரும் சர்ச்சைக்கு மத்தியில் சென்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், எஸ்.வினோநோதராதலிங்கம் ஆகியோரே குருந்தூர்மலைக்குச் சென்றனர்.

இருந்தபோதிலும் அவர்கள் அங்கு செல்வதைப் பொலிஸார் இடையில் தடுத்தனர். எனினும், நீண்ட இழுபறியின் பின்னரே அவர்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை, ஊடகவியலாளர்கள் எவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் செல்ல முடியாது என்று இறுக்கமாகத் தெரிவித்த பொலிஸார் ஊடகவியலாளர்களைத் தடுத்து நிறுத்தினர்.

குருந்தூர்மலையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்து அந்தப் பகுதியில் கட்டட நிர்மாணப் பணி ஒன்றை முன்னெடுப்பதற்கான முயற்சி நடைபெறவுள்ளது எனவும், அமைச்சர் ஒருவர் இன்று அங்கு பிரசன்னமாகவுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

# சாகும் வரையில் உண்ணாவிரம் இருக்கும் இரு தொழிலாளிகளையும் காப்பாற்றுங்கள்!

## கூட்டுறவுத்துறையினரிடம் சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.18

“உயிரைப் பணயம் வைத்து சீவல் தொழில் செய்யும் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளோடு விளையாடாமல் சங்கத்தின் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வைப்பதே சிறந்த நிர்வாகமாகும்.” – என்று சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த ஒருவாரகாலமாக சங்கத்தின் ஜனநாயக பண்புகளைக் காப்பாற்றுமாறு கோரி தென்னை, பனம்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்கள் சாகும் வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டக் களத்தில் அவர்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து கருத்துத் தெரிவிக்கும்போதே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:-

கடந்த ஆறு நாளாக கிளிநொச்சி மாவட்ட தென்னை பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தைச் சார்ந்த இரண்டு தொழிலாளிகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே இருந்த நிர்வாகத்தை ஊழல்கள் நிறைந்ததென காரணம் காட்டி கூட்டுறவு ஆணையாளர் அந்த நிர்வாகத்தைக் கலைத்து ஐந்துபேர் கொண்ட ஒரு புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்ததை எதிர்த்தும், உடனடியாகப் புதிய நிர்வாகத்தை மீண்டும் ஸ்தாபிக்குமாறும், அதற்கான தேர்தலை நடத்துமாறு கோரியும் இந்த



உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய 550 குடும்பங்களுக்கு மேல் பாதிப்படைந்துள்ளன. தவறணைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. வாழ்வாதாரங்கள் அற்று, ஒரு வேளை உணவிற்கே அல்லலுறும் நிலைக்கு இந்தக் குடும்பங்கள் தள்ளப்பட்டுள்ளன.

சாதி ரீதியான ஒடுக்கு முறைக்குள் தள்ளப்பட்டுள்ள இந்த சமூகத்தை ஆணையாளரின் மேற்படி முடிவானது அவர்களை பொருளாதார நெருக்கடிக்கும் தள்ளியுள்ளது. ஏறத்தாழ ஒருவாரமாக உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் கூட்டுறவுத்துறை சார்ந்த தொழிலாளிகளை இதுவரை கூட்டுறவு ஆணையாளர் நேரில் சென்று சந்திக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.

கூட்டுறவுத்துறையானது முன்னேற்றப்படவேண்டுமாக இருந்தால், அந்தத் துறையின் ஜனநாயகப் பண்புகள் பாதுகாக்கப்படவேண்டும். கிளிநொச்சி தென்னை பனம்பொருள் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தவரையில், நூறுபேரைக் கொண்ட பொதுச்சபை ஒன்று இருக்கின்றது.

அந்த பொதுச்சபையுடன் கலந்துரையாடாமல், நடைமுறையில் இருந்த நிர்வாகத்தைக் கலைத்து ஒரு குடும்ப அங்கத்தவர்கள் உறவினர்களை உள்ளடக்கிய புதிய நிர்வாகத்தை அமைத்ததென்பது ஜனநாயக விரோதச் செயல் என அப்பொதுச் சபையினர் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு முந்தைய நிர்வாகக்குழு தவறு செய்திருந்தால் பொதுச்சபை தாமாகவே வேறொரு நிர்வாக சபையைத் தெரிவு செய்துகொடுத்திருக்க முடியும். அதனை விடுத்து, கூட்டுறவுச் சங்கங்களின் துணைவிதிகளுக்கு முரணாக ஆணையாளர் நடந்து கொண்டமையை அந்த சங்கத்தின் பொதுச்சபையினர் கண்டிக்கின்றனர்.

உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளை ஒருவாரமாக நேரில் சென்று சந்திக்காமல், அவர்களது கோரிக்கைகளைப் பரிசீலித்து அவர்களின் போராட்டத்தை முடித்து வைப்பதற்கு முயற்சிகளை எடுக்காமல் இருப்பது ஒரு சிறந்த நிர்வாகத்திற்கு ஏற்புடைய ஒரு செயலாக இருக்க முடியாது. சங்கத்தின் நிர்வாகத்தில் நடைபெற்றவை எனக் கூறப்படும் ஊழல்களை விசாரிப்பது ஒருபுறம் நடக்க, சங்கத்தின் அன்றாட செயற்பாடுகள் ஜனநாயக விழுமியங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படுவது மிகவும் அவசியம்.

உயிரைப் பணயம் வைத்து சீவல் தொழில் செய்யும் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளோடு விளையாடாமல் சங்கத்தின் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வைப்பதே சிறந்த நிர்வாகமாகும்.

இறுதியாக, ஒருவாரமாக சாகும்வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளின் நிலைமையை மனிதாபிமானத்தோடு அணுகுமாறும் விரைவில் உரிய நடவடிக்கை எடுத்து அவர்களின் போராட்டத்தை முடித்துவைத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றுமாறும் வேண்டுகின்றேன்.- என்றுள்ளது.

## தலதா மாளிகையின் வளாகத்தில் நான்கு பொலிஸாருக்குத் தொற்று!

### 200 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

தலதா மாளிகை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, அந்த நிலையத்தில் கடமையாற்றும் 200 பேர் அளவில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில், பொலிஸ் நிலையத்தின் கடமைகளுக்காக வேறு பொலிஸ் அதிகாரிகள் 180 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மேலும் சில இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டன!

இலங்கையில் மேலும் சில பகுதிகள் மறு அறிவித்தல் வரும் வரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மினுவாங்கொடை பொலிஸ் அதிகாரப் பிரிவிற்கு உட்பட்ட கிழக்கு கல்லொலுவ மற்றும் மேற்கு கல்லொலுவ போன்ற கிராம சேவகர் பிரிவுகள் இரண்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல மாத்தளை பொலிஸ் அதிகார பிரிவிற்கு உட்பட்ட வரக்காமுற மற்றும் மீதெனிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் தெஹிபிட்டிய – மாத்தாவ கிராமம் ஆகியனவும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## சிறைச்சாலை கொரோனா கொத்தணி: 4 ஆயிரத்து 310 ஆக உயர்வடைவு!

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் மேலும் 17 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 16 ஆண் கைதிகளும் சிறைச்சாலை அதிகாரியொருவரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, சிறைச்சாலை கொத்தணியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 4 ஆயிரத்து 310 ஆக உயர்வடைந்துள்ளது. இவர்களில் 123 சிறை அதிகாரிகளும் 3 ஆயிரத்து 945 கைதிகளும் பூரண குணமடைந்துள்ள நிலையில், தற்போது 9 அதிகாரிகளும் 233 கைதிகளும் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## நாடாளுமன்றத்தின் ஊழியர்கள் மேலும் நால்வருக்குத் தொற்று!

நாடாளுமன்றத்தில் சேவையாற்றும் ஊழியர்கள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த பி.சி.ஆர்.பரிசோதனைகளின் முடிவுகளில் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹகீம் ஆகியோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் 31 பேரும், பணியாளர்கள் பலரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நாடாளுமன்றில் சகலரும் பி.சி.ஆர்.பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும் என சபாநாயகர் வலியுறுத்தியிருந்தார்.

அதற்கமைய கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மேலும் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் 463 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில், எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், நாடாளுமன்ற பணியாளர்களுடன் நாடாளுமன்ற பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட 448 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்களில் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற ஊழியர்கள் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீர்வழங்கல் அமைச்சு ஊழியர்கள் எவருக்கும் கொரோனா இல்லை!

நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படவில்லை என நீர்வழங்கல் அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் செயலாளர் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களுக்கு அண்மையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், அந்த பரிசோதனைகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன் அடிப்படையில், அமைச்சரின் செயலாளர் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படவில்லை என நீர்வழங்கல் அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாணபிரதிநிதிகளும் தன்னார்வமாக பி.சி.ஆர் பரிசோதனையை செய்துகொண்டமையுடன், அவர்களுக்கும் கொரோனா தொற்று இல்லையென உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களின்படி, அமைச்சின் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிவகரனிடம் ரி.ஐ.டி விசாரணை மாவீரர் அனுஷ்டிப்பு பற்றி துருவல்

தமிழ்த் தேசிய வாழ்வுரிமைக் இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மன்னாரில் உள்ள அவரது இல்லத்திற்கு கடந்த சனிக்கிழமை வவுனியாவிலிருந்து சென்றிருந்த பயங்கரவாத குற்றப்புலனாய்வுப் பிரிவினர், கடந்த ஆண்டு மாவீரர் தினத்தை நினைவு கூர்ந்தமை தொடர்பில் துருவித்துருவி வினாக்களைத் தொடுத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அத்துடன் அவருடைய சமகால அரசியல் செயற்பாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேநேரம், எதிர்காலத்தில் அந்த விதமான நினைவு கூரும் விடயங்களைத் தவிர்க்குமாறு பயங்கரவாத குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிவுரைகளை வழங்கிச்சென்றுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## யதார்த்த நிலைமை யாது?

பேரம் பேசுதல் அல்லது சமரச முயற்சிகளில் ஈடுபடும் தரப்புகள் ஒரு பண்பியல்பைப் பின்பற்றுவது வழமை.

அது – நாங்கள் கேட்பதை உச்சமாக கேட்போம். கிடைப்பது கிடைக்கட்டும். இவ்வளவுதான கிடைக்கும் என்பதற்காக நாம் குறைத்துக் கேட்கத் தேவையில்லை. உச்சமாகக் கேட்பதில் தப்பில்லை. கொடுக்கும் போது மறுதரப்பு தீர்மானிக்கட்டும் – என்ற நிலைப்பாடு தான்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் பெப்ரவரி – மார்ச் மாத அமர்வை ஒட்டி தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு முன்வைத்திருக்கும் கோரிக்கைக் கடிதம் கூட இத்தகைய அடிப்படையில்தான் முன்வைக்கப்பட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அந்தக் கோரிக்கையில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டது இனவழிப்பு (Genocide) என்று கூறப்பட்டிருக்கின்றது.

*“தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்ட இனப்படுகொலைக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், யுத்தக் குற்றங்கள், உரிமை மீறல்கள்”*போன்றவற்றை விசாரிப்பதற்கான ஏற்பாடு பற்றி அந்தக் கோரிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தக் கோரிக்கையின் தமிழாக்கத்தில் ‘இனப்படுகொலை’ என்று குறிப்பிடப்படுவது Genocide தான். அது இனவழிப்புத்தான்.

தமிழ்த் தேசியத் தரப்புகளின் இக்கோரிக்கையை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகள் முழுமையாக ஏற்றுச் செயற்படுவதாயின், அவை முதலில் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றாக வேண்டும். ஆனால் அப்படியான நிலைமை அங்கத்துவ நாடுகள் மத்தியில் இப்போதுவரை இல்லை என்பதுதான் நிலைமை. இங்கு நடைபெற்றது இனவழிப்புத்தான் என்பதை போதிய சான்றாதாரங்களுடன் நாம் இன்னும் நிரூபிக்கவில்லை.

யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், படுகொலைகள், உரிமை மீறல்கள் எல்லாம் நடந்தன என்பதை ஏற்றுக் கொள்ளும் சர்வதேச நாடுகள், இலங்கையில் நடைபெற்றது ‘இனவழிப்பு’ என்ற கோட்பாட்டுக்குள் உள்ளடங்கும் கொடூரம் என்பதை ஏற்று, அதனடிப்படையில் செயற்படுமா என்பது கேள்விக் குறிதான்.

1983 இல் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்ந்த போது – ஆடிக் கலவரக் கொடூரம் நடைபெற்ற போது – அது குறித்து ஒரு தடவை கருத்து வெளியிட்ட இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கையில் நடைபெற்றது ‘இனவழிப்பு’ என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், இன்று அன்னை இந்திராவின் தேசம் கூட எமது தமிழினத்திற்கு எதிராக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்டது ‘இனவழிப்பு’ அல்லது இனப்படுகொலை என்று வகைப்படுத்த முன்வராது என்பதுதான் யதார்த்த நிலைமை.

அடுத்தது – யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் பொறுப்புக் கூறல் விவகாரம்.

இந்த விடயத்தை ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கையில் எடுத்தது 2011 இலாகும். அதுவும் கவுன்ஸில் தன்னிஷ்டப்படி சுயமாக அதைத் தன் கையில் எடுத்துக் கையாளவில்லை. மாறாக அந்தப் பொறுப்பு ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு ஒப்படைக்கப்பட்டது. இலங்கையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கென்று தருஸ்மன் தலைமையில் மூன்று சர்வதேச நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்தார். அந்தக் குழு இலங்கையில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று சமர்ப்பித்த அறிக்கையை கவனத்தில் எடுத்த ஐ.நா. செயலாளர் நாயகம் அதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தலைவரிடம் கையளித்தார். அந்த அறிக்கையையும் அடிப்படையாக வைத்துக் கொண்டே பொறுப்புக் கூறலை உள்ளடக்கிய தீர்மானங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டு தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆக, அந்தப் பொறுப்புக் கூறல் விடயத்தை நிறைவேற்ற முடியாதிருப்பதால் அதனை மீள ஐ.நா. பொதுச் சபைக்கோ அல்லது பாதுகாப்புச் சபைக்கோ, அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கோ பாரப்படுத்தி விடுங்கள் என்று இவ்விடயத்தில் பாதிக்கப்பட்ட பிரதான தரப்பினராகிய நாங்கள் – தமிழர்கள் – கேட்டவுடன் அதனை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் திருப்பி அனுப்பி விடுவார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது சாத்திய மற்றது.

இன்றைய சர்வதேச அரசியல் களப்புறச் சூழலில் இலங்கையின் குடுமியைப் பிடித்து ஆட்டுவதற்கு தங்களுக்குக் கிடைத்திருக்கும் பொறுப்புக் கூறல் என்ற துரும்பை இலகுவில் சாத்தியமற்ற ஒரு தளத்துக்குப் பாரதீனப்படுத்தி, தள்ளிவிட்டு, இலங்கை மீதான தங்களின் பிடிக்கான வாய்ப்பை இழக்க மேற்குலக நாடுகள் இலகுவில் இணங்கா என்பதும் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

### கொரோனாவால் ஐவர் மரணம்:

# மட்டக்களப்பு அரசடி கிராமம் தனிமைப்படுத்தப்பட்டது!

மட்டக்களப்பு, ஜன.18

மட்டக்களப்பு – அரசடி கிராம சேவையாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்

மட்டக்களப்பு நகரில் கடந்த சனிக்கிழமை ஐந்தாவது கொரோனா மரணம் பதிவாகியுள்ளது. அரசடி சந்தை வீதியில் உள்ள வீட்டில் 79 வயதுடைய ஆணொருவர் உயிரிழந்துள்ளார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஐந்து பேர் கொரோனா தொற்றுக்குள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அரசடி கிராம சேவையாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக முடக்கப்பட்டதன் காரணமாக மட்டக்களப்பு பொதுச்சந்தை மூடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொதுச்சந்தை மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், வீதி போக்குவரத்து அனுமதி வழங்கும் காரியாலயம் என்பனவற்றுக்கு செல்லும் வீதிகளும் முடக்கப்பட்டுள்ளன.

கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 467ஆக அதிகரித்துள்ளதாக வைத்தியர் மயூரன் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் பிரதமர் இலங்கைக்கு விஜயம்



கொழும்பு, ஜன.18

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அதன்படி அவர் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள அவர், 5 நாள்கள் நாட்டில் தங்கியிருந்து பல முக்கியஸ்தர்களுடன் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு பண்டாரவளையில் கொரோனாத் தொற்று!

பண்டாரவளை – கினிகம பகுதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் பெண்ணொருவருக்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், அவரின் குடும்பத்தினருக்கு கடந்த 15 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அதன் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அதில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து அவர்கள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கிளிநொச்சியில் வான் பாயும் குளங்கள் பல பகுதிகளில் போக்குவரத்துப் பாதிப்பு



கிளிநொச்சி, ஜன.18

கிளிநொச்சி – கரியாலை, நாகபடுவான் குளம் மற்றும் ஜெயபுரம், பல்லவராயன் கட்டு குளம் ஆகியன தொடர்ந்தும் வான் பாய்வதால் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு உள்ளிட்ட கிராமங்களுக்கான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக பெய்த கன மழையால் குளங்கள் நிரம்பி வெளியேறும் அதிகளவான வெள்ளநீர், வேரவில் – கிராஞ்சி வீதியிலேயே காணப்படுகிறது.

மேலும் இரண்டு இடங்களில் நான்கு அடிக்கு மேல் வெள்ள நீர் பாய்ந்த வண்ணம் உள்ளது. கடந்த ஆறு நாள்களுக்கு மேலாக பஸ் போக்குவரத்துச் சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் உள்ள மக்களுடைய போக்குவரத்து தேவைகளைக் கருதி, பூநகரி பிரதேச சபையால் உழவு இயந்திரத்தில் பயணிகளை ஏற்றி, இறக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## மூடப்பட்டுள்ள பாடசாலைகள் வவுனியாவில் இன்று திறப்பு!

வவுனியாவில் கொரோனா தொற்று அதிகரித்த நிலையில் தற்காலிகமாக மூடப்பட்ட நகர பாடசாலைகள், இன்று (திங்கட்கிழமை) முதல் மீண்டும் செயற்படவுள்ளன எனக் கூறப்படுகின்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நகரப்பகுதிகள் உட்பட 19 கிராமசேவையாளர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்தப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட அநேகமான பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கான முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையுடன் இதுவரை 175 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நகரின் நிலைமை தொடர்பாக வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதன்படி நகரில் அனைத்து பாடசாலைகளின் கல்வி செயற்பாடுகளும் இன்று ஆரம்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நகரில் முடக்கப்பட்டுள்ள சில பகுதிகளை இன்று விடுவிப்பதற்கும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

# துறைமுக கிழக்கு முனையத்தின் பங்குகளை வாங்க எமது நாட்டில் நிறுவனங்கள் உள்ளன

## இப்படிக் கூறுகின்றார் அசாத் சாலி



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் பங்குகளை பெற்றுக்கொள்ள உள்நாட்டில் நிறுவனங்கள் இருக்கின்றன. அரசாங்கம் முடியுமானால் அது தொடர்பில் விளம்பரப்படுத்த வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்தார்.

தேசிய ஐக்கிய முன்னணி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் வளங்கள் எதனையும் வெளிநாடுகளுக்கு வழங்கப்போவதில்லை என்றும் கடந்த அரசாங்க காலத்தில் வழங்கியவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வோம் எனவும் தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று ஒரு மாதத்திலேயே சங்கிரில்லா ஹோட்டலுக்கு அடுத்ததாக இருந்த காணியை அரசாங்கம் வெளிநாட்டு கம்பனி ஒன்றுக்கு விற்பனை செய்தது.

இராணுவத் தலைமையகம் இருந்த காணியிலேயே தற்போது சங்கிரில்லா ஹோட்டல் இருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் போதே அதனை சங்கிரில்லா ஹோட்டலுக்கு விற்பனை செய்தார்.

அத்துடன் தற்போது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையை இந்தியாவுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

ஆனால் கிழக்கு முனையத்தை வழங்குவதில்லை எனக் குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் பிரதமர் தெரிவித்து வருகின்றனர்.

கிழக்கு முனையத்தின் 49 வீத பங்கை இந்தியாவுக்கு வழங்க தீர்மானித்திருப்பதாகவும் அதனை மாற்ற முடியாது எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

மேலும் துறைமுக தொழிற்சங்கங்களுடன் ஜனாதிபதி நடத்திய பேச்சு தோல்வியில் முடிவடைந்திருக்கின்றது. கொழும்பு துறைமுகத்தின் நூறுவீத பங்கும் துறைமுக அதிகாரசபைக்கு கீழே இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

அரசாங்கம் இந்தியாவுக்குக் கொடுப்பதன் மூலம் பெரும் இலாபத்தைத் தங்களால் பெற்றுக்கொள்ள முடியும் என்றே தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அதனால் நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருப்பதை அரசாங்கம் தெரிவித்து, கொழும்பு துறைமுகத்தின் 49 வீத பங்கை பெற்றுக்கொள்ள யாரேனும் முன்வந்தால் அதனை வழங்குவதற்கு தயார் என முடியுமானால் விளம்பரப்படுத்தவேண்டும்.

அவ்வாறு செய்தால் உள்நாட்டில் இருக்கும் கம்பனிகள் அதனைப் பெற்றுக்கொள்ள முன்வரும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது.– என்றார்.

# பொங்கு தமிழ் பிரகடனத்தின் 20ஆம் ஆண்டு: யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை!





சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் ஆகியவையே எமது மூச்சு எனவும் இதற்காக உரத்து ஒலிப்போம் என்றும் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள் பேர் எழுச்சியாகத் திரண்ட பொங்கு தமிழ் பிரகடனத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் பாக்கியநாதன் உஜாந்தன் தலைமையில் இந்த நினைவு நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில், இரண்டு நிமிடங்கள் மௌன மரியாதை செலுத்தப்பட்டதுடன் மற்றும் மலர் தூவி பொங்கு தமிழ் பிரகடன 20 ஆம் ஆண்டு நிறைவுநாள் நினைவு கூரப்பட்டது. இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தயாரிக்கப்பட்ட பொங்கு தமிழ் நினைவு நாள் அறிக்கை வாசித்துக் காட்டப்பட்டது.

அந்த அறிக்கையில் –

முள்ளிவாய்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் தங்களது நினைவு உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு காலப் பின்னணியில் நாங்கள் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்கின்றோம்.

2001 ஆம் ஆண்டு ஜனவரி 17 இல் தமிழ் மக்கள் தங்களது இன உரிமைகளை வலியுறுத்தி உலகெங்கும் அவற்றைப் பறைசாற்ற மிகுந்த எழுச்சியோடு இராணுவ அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடினார்கள்.

அவ்வாறாக அவர்கள் ஒன்றுகூடி வந்தபொழுது மேற்கொண்ட பிரகடனத்தை நாம் இங்கு கல்வெட்டாக வடித்து வருடா வருடம் நினைவு கூறுகின்றோம். தமிழ் மக்களது அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்கின்ற விடயங்களை இந்தப் பிரகடனம் உள்ளடக்கி நிற்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த இந்த பொங்கு தமிழ் உலகின் பல நாடுகளிலும் அங்கங்கு வாழும் தமிழ் மக்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு உலகம் முழுவதற்கும் தமிழ் மக்களது அடிப்படை அபிலாஷைகளை எடுத்துரைத்து வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தின் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இந்த பொங்கு தமிழ் நிகழ்வும், இங்கு நிறுவப்பட்டிருக்கும் பொங்கு தமிழ் பிரகடன கல்வெட்டும் பறைசாற்றி நிற்கின்றன.

காலாதி காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எடுத்துவந்த தமிழ்த் தேசிய நிலைப்பாடு, அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இந்தக் காலகட்டத்தில் நமது பொங்கு தமிழ் பிரகடன நினைவுகூரல் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆகவே, மீண்டும் ஒருமுறை இந்த வருடமும் சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் இவையே எமது மூச்சு என உரத்து ஒலிப்போம். – என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது!

காலி – போத்தல பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போத்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகருக்காராம பகுதியில் கடந்த சனிக்கிழமை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாகருக்காராம பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 25 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பின் கீழ் , விடுவிக்கப்பட்டவர் என்றும் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை , கல்கிஸ்ஸ – கட்டுகுருந்துவத்த வீதியில் பொலிஸார் முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளின் போது , ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து இரண்டு கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

# படுகொலையுண்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் நினைவேந்தல் நிகழ்வு 24 ஆம் திகதி திருமலையில்!

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) திருகோணமலையில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக கிழக்கு ஊடக ஒன்றியத்தின் தலைவர் தேவ அதிரன் தெரிவித்தார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்துடன் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ்.ஊடக அமையம் மற்றும் தெற்கு ஊடக அமைப்புக்களுடன் இணைந்து கிழக்கு ஊடக ஒன்றியத்தின் தலைவர் எல்.தேவ அதிரன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சுகாதார விதி முறைகளுக்கு ஏற்றாற்



போல் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், சமூக நலன் விரும்பிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளெனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி ஈகைச்சுடர் ஏற்றி 2 நிமிட மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

கடந்த 2006 இல் உயர்தரக் கல்வியை முடித்த பின்பு, பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை சுகிர்தராஜன் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சித்தபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்தமையைத் தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட அழுத்தங்கள் ஏற்பட்டன.

சுகிர்தராஜன் யுத்த சூழலிலும் துணிச்சலுடன் ஊடக பணியாற்றிய போதே 2006 ஜனவரி 24ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்துக்கு அருகில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு – குருமண்வெளியை பிறப்பிடமாகக்கொண்ட சுகிர்தராஜன் அம்பாறை வீரமுனையில் வசித்துவந்த நிலையில் திருகோணமையில் பணி நிமித்தம் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# தனியார் பஸ் உரிமையாளர்கள் அரசுக்கு ஒரு வார காலக்கெடு

## எச்சரிக்கின்றது அவர்களின் சங்கம்

தனியார் பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்கு ஒருவார காலத்துக்குள் தீர்வு வழங்குவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் வழங்கிய வாக்குறுதியை தொடர்ந்து கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்படவிருந்த பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

எனினும் 6 கோரிக்கைகளுக்கு ஒரு வாரகாலத்துக்குள் தீர்வு வழங்காவிடின் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுப்படுவோம் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் கடந்த வருடம் மார்ச் மாதம் தொடக்கம் தனியார் பஸ் போக்குவரத்து சேவை முழுமையாக முடக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் அரசாங்கம் உரிய நிவாரணம் வழங்கவில்லை. இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட நிவாரண நிதி தென்மாகாண சபை ஊடாக ஏனைய மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அந்த நிவாரணமும் முழுமையாகக் கிடைக்கப் பெறவில்லை

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம். அரசாங்கத்துக்கும் தனியார் பஸ் சங்கத்தினருக்கும் முரண்பாடற்ற வகையில் பல திட்டங்களை முன்வைத்தோம். ஆனால் அவை செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறான நிலையில் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தின் முதலாம், இரண்டாம் அலையின் காரணமாக தனியார் பஸ் சேவையில் ஈடுப்பட்ட சுமார் 600 பேர் சேவையைக் கைவிட்டுள்ளார்கள். இவர்கள் வாழ்வாதார மட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் மறக்கப்பட்டுள்ளன. ஆகவே அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாட்டை கண்டித்தும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ளவும் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தோம்.

பணிப்புறக்கணிப்பு போராட்ட தீர்மானத்தின் பின்னர் இராஜாங்க அமைச்சர் பேச்சுக்கு அழைப்புவிடுத்தார். இந்தச் சந்திப்பின் போது தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தால் 6 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. தனியார் மற்றும் அரச பஸ் சேவையை ஒரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரல், லொக்சீட் சேவைக்கான நவம்பர் , டிசெம்பர் மாதத்துக்கான கட்டணம் அறவிடல் இரத்து செய்தல், லீசிங் வசதிகளை வழங்கல், நிவாரண கடன் வழங்கல், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு சுகாதார பாதுகாப்பு உபகரணங்களை



வழங்கல் ஆகியவை சங்கத்தின் பிரதான கோரிக்கைகளாகக் காணப்படுகின்றன.

இந்தக் கோரிக்கைகளுக்கு ஒருவார காலத்தில் தீர்வு வழங்குவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் வாக்குறுதி வழங்கியுள்ளார். இதனால் நேற்று முதல் முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. ஒருவாரகாலத்திற்குள் தீர்வு கிடைக்கப் பெறாவிடின், பேச்சில்லாத தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவோம். – என்றார்.

# 1,000 ரூபா சம்பள விவகாரம்: கறுப்புப் பட்டிப் போராட்டம்!

## ஹற்றனில் நேற்று நடந்தது





பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1,000 ரூபா நாள் சம்பளத்துக்கு உரிய தீர்வை உடனடியாக வழங்குமாறு வலியுறுத்தி, கறுப்பு பட்டியணிந்து ஹற்றனில் போராட்டமொன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

பெருந்தோட்ட தொழிலாளர் வேதன உரிமைக்கான இயக்கம் முன்னெடுத்து வரும் நாளாந்த அடிப்படை சம்பளம் மற்றும் மாதத்தில் 25 நாள் வேலை கோரிக்கைக்கான தொடர் போராட்டத்தின் ஓர் அங்கமாக ஹற்றன் – மல்லியப்பு சந்தியில் நடைபெற்ற போராட்டத்தில் மலையகத்தில் உள்ள பல்வேறு சிவில் அமைப்புகளும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கியிருந்தன.

மேற்படி போராட்டத்தை மலையக சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்புப் பட்டியை தலையில் அணிந்திருந்தமையுடன் பதாதைகளை ஏந்தி கோ–ஷமிட்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொழிலாளர்களின் இந்த நியாயமான கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனம் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும், இதை தொழிலாளர்கள் சார்பில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தமையுடன், அரசாங்கம் உறுதியளித்தப்படி தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை நாள் சம்பளத்தை 1,000 ரூபாவாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும், இதை இழுத்தடிப்பு செய்வதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இம்மாதம் முடிவதற்குள் தொழிலாளர்களின் சம்பள உயர்வு பேச்சு முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும், மாறாக இழுத்தடிப்பு செய்யும் பட்சத்தில் கடந்த காலங்களை போல் ஏமாற்றம் செய்யாது குறிப்பிட்ட காலத்துக்கான நிலுவை பணத்தை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் இந்த நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாகவும் மலையகத்தில் உள்ள ஏனைய பல்வேறு இடங்களிலும் இப்போராட்டத்தை விஸ்தரிக்கவுள்ளதாகவும் மலையக சிவில் அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.டி.கணேசலிங்கம் தெரிவித்தார்.

# கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் மட்டக்களப்பில் கைதானார்!

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கதிரவெளி பிரதேசத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் 10 போத்தல் கசிப்புடன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கைது செய்யப்பட்டுள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்றுக் காலை கதிரவெளியிலுள்ள வீடு ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்து மேற்கொண்ட தேடுதலில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை 10 போத்தல் கசிப்புடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் இரு நடைமுறைகளில் மீள அழைப்பு!

## இராணுவத் தளபதி கூறுகின்றார்



வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இரண்டு நடைமுறைகளின் கீழ் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தனிமைப்படுத்தலுக்காக ஹோட்டல்களுக்கு அனுப்பிவைக்கப்படுவோரிடம் அறவிடப்படும் பணத்தின் அளவை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் –

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் இரண்டு நடைமுறைகளின் கீழ் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர். மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை அழைத்து வருவதிலேயே பிரச்சினை உள்ளது.

ஒன்று இலங்கையில் தயார்ப்படுத்தப்பட்ட விமானங்கள் ஒரு நாளில் ஒரு தடவையே பயணத்தில் ஈடுபடுகின்றது. அவ்வாறு பல நாடுகளில் இருந்து பல்வேறு விமான சேவைகள் நாட்டுக்கு வருகின்றன. இவற்றில் 75 இலங்கை பணியாளர்களை அழைத்து வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சில நட்சத்திர விடுதிகளோடு பேசியுள்ளோம். அந்த பேச்சுகளுக்கு அமைய இன்று அல்லது நாளை அளவில் தனிமைப்படுத்தலுக்கான ஹோட்டல் செலவுகள் குறைவடையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகளுக்கு அடித்த குற்ற உணர்வை தாங்கமுடியாது தந்தை தற்கொலை!

கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சண்டையின் போது குறுக்கே சென்ற மகள் மீது தந்தையர் தாக்கியமையையடுத்து அவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் தந்தை தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று திருக்கோவிலில் இடம்பெற்றுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மதியம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் திருக்கோவில் 2 ஆம் பிரிவு நல்லையா வீதியைச் சேர்ந்த 41வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராசமாணிக்கம் சுகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த நபருக்கும் அவரது மனைவிக்கும் இடையே சம்பவதினமான நேற்று பகல் சண்டை ஏற்பட்டுள்ளது. இதன்போது தாயாரை தந்தையர் தாக்க முற்பட்டபோது மகள் குறுக்கே சென்றமையால் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் அவர் காயமடைந்த நிலையில் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மனைவி வைத்தியசாலைக்கு சென்ற நிலையில், வீட்டில் எவரும் இல்லாதபோது மகளைத் தாக்கிய குற்ற உணர்வைத் தாங்க முடியாமல் அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் உயிரிழந்தவரின் உடலை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கவுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# தமிழ் மாணவிகள் இருவர் பிரான்ஸில் அகாலமரணம்!



பிரான்ஸில் மருத்துத் துறையில் கல்வி பயின்று வந்த யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட மாணவிகள் இருவர் அகால மரணம் அடைந்தமை அங்குவாழும் தமிழர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்.தீவகம், அல்லைப்பிட்டிபகுதியில்வசித்து வரும் செல்லத்துரை குலேந்திரா தம்பதியினரின் மகளான கார்த்திகா கடந்த எட்டாம் திகதி பிரான்ஸில் அகால மரணமடைந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மந்துவில் வடக்கு கொடிகாமத்தை சொந்த இடமாகவும் பிரான்ஸில் வசித்து வந்தவருமான சந்திரராசா என்பவரின் மகளான சிநேகா கடந்த 13ஆம் திகதி அகால மரணம் அடைந்துள்ளார்.

இவரும் பிரான்ஸில் உள்ள மருத்துவ கல்லூரி ஒன்றில் படித்து வந்துள்ளமையுடன் பிரான்ஸ் செவ்ரோன் தமிழ்ச்சோலையின் மாணவிகளும் ஆவர். கல்வி, விளையாட்டு ஆகிய இரண்டு துறைகளிலும் பிரகாசித்து வந்தவரான சிநேகாவின் மரணமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஐ.தே.கவின் புதிய நிர்வாகிகள் வியாழக்கிழமை பதவி ஏற்பு!

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் குழு எதிர்வரும் வியாழக்கிழமை தங்களது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளது.

அன்றுமுதல் கட்சியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்த உள்ளதாக கட்சியின் புதிய செயலாளர் பாலித ரங்கே பண்டார ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தவை வழிநடத்தல் மையமாக அன்றைய தினம் பெயரிட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவி நிலைகளுக்கான நியமனங்களை மேற்கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கடந்த 13 ஆம் திகதி கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் கூடியது.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டார்.

அதேநேரம், முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன கட்சியின் தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

மேலும் பாலித ரங்கே பண்டார ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளராகவும் ஏ.எஸ்.எம்.மிஸ்பா கட்சியின் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

# ‘தூய கரம்; தூய நகரம்’ வேலைத்திட்டம் யாழில்!





யாழ்.மாநகர முதல்வரால் ‘தூய கரம்; தூய நகரம்’ வேலைத்திட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபை முதல்வர் மணிவண்ணனால் ‘தூய கரம்; தூய நகரம்’ என்ற தொனிப்பொருளில் யாழ்.நகரத்தை தூய்மைப்படுத்தும் செயற்பாடுஇடம்பெற்றது.

இந்தத் தூய்மைப்படுத்தும் வேலைத் திட்டத்தில் யாழ்.மாநகரசபை ஆணையாளர், யாழ்.மாநகர சபை சுகாதார ஊழியர்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 1,559 கிலோ கிராம் மஞ்சள் தெமட்டகொடவில் மீட்பு!

கொழும்பு, தெமட்டகொட பகுதியில் 1,559 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் பொலிஸ் விசேட அதிரடைப் படையினரால் கடந்த சனிக்கிழமை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்போது இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், மஞ்சள் கொண்டு செல்ல பயன்படுத்திய லொறியொன்றையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள் சட்டவிரோத மான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சுகாதாரவிதி பின்பற்றாத வர்த்தகருக்கு எதிராக மன்னாரில் கடும் நடவடிக்கை!





மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீது நேற்று சனிக்கிழமை காலை, பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் தொடர்சியாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

எனவே மக்களை உரிய சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்குமாறு பொலிஸார் மற்றும் சுகாதார துறையினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் கொரோனாப் பரவலைத் தடுக்கும் முகமாக மன்னார் பொலிஸார் மேற்படி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தகநிலையங்கள் மற்றும் உணவகங்கள் மீது வழக்கு பதிவு செய்து வருகின்றனர்.

குறிப்பாக முகக்கவசம் அணியாத வர்த்தகர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கை கழுவுவதற்கு ஒழுங்கான ஏற்பாடு மேற்கொள்ளாத வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டதுடன் ஒரு சில வர்த்தகர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கவும் பட்டனர்.

அதேநேரத்தில் பொது இடங்களில் சமூக இடைவெளி மற்றும் முகக்கவசங்களை சரியான முறையில் அணியாமல் நடமாடும் பொது மக்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மன்னார் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 288 இலங்கையர்கள் நாட்டுக்கு மீண்டனர்!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த மேலும் பலர் நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, தொழிலுக்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்றிருந்த 288 இலங்கையர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

விசேட விமானம் மூலம் இந்த 288 பேரும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடுதிரும்பிய அவர்கள் அனைவரிடமும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போன பெண் ஆற்றில் சடலமாக மீட்பு!



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஸல்ரீ நீர்தேக்கத்திற்கு நீர் வழங்கும் கெஸ்கமுவ ஓயா ஆற்றில், கடந்த சனிக்கிழமை உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலமொன்று கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டவர், மஸ்கெலியா- மவுஸ்ஸாகலை தோட்ட ஸ்ரீபாத பிரிவைச் சேர்ந்த 65 வயதுடைய சிதம்பரம் ருக்மணி என்றபெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்தப் பெண், கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமல் போய்விட்டார் எனப் பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் இருந்து கைப்பை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் மரணம் தொடர்பாகப் பலகோணங்களில் பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

ஹற்றன் நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

# கிழக்கு முனையத்துக்கான யோசனை திட்டத்தை சமர்ப்பிக்க தொழிற்சங்கங்களுக்குக் காலக்கெடு!

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் முழுமையான உரித்தையும் இலங்கையே கொண்டிருக்க வேண்டும் என்றும், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கீழ் உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் அபிவிருத்திகளைச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்திவரும்தொழிற் சங்கங்களுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அதற்கான யோசனைகள் அடங்கிய திட்டத்தைக் கையளிக்குமாறு காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், அமைச்சின் அதிகாரிகள், துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் அபிவிருத்திச்செயற்பாடுகள்தொடர்பாகஆராய்வதற்கான நியமிக் கப்பட்ட குழுவின் அங்கத்தவர்கள் ஆகியோருக்கும் இடையிலானகலந்துரையாடலொன்று நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சின் செயலாளர் யு.டி.சி. ஜெயலால், அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரட்நாயக்க ஆகியோர் பங்கேற்ற கலந்துரையாடலே கடந்த சனிக்கிழமை நடைபெற்றிருந்தது.

இந்தக் கலந்துரையாடலின்போது தொழிற் சங்கத் தரப்பில் –

ஏற்கனவே ஜனாதிபதி முன்னிலையில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையான கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் ஒரு சதவீத பங்கையும் வெளிநாடுகளுக்கு வழங்கக்கூடாது, அதனுடைய பூரணமான முகாமை துறைமுக அதிகர சபையின் கீழ் இருக்க வேண்டும், அத்துடன் உள்நாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பில் அதன் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக்குழுவினிடம்தொழிற்சங்கங்களின் எதிர்பார்ப்புக்களை முன்னெடுப்பதற்கான யோசனை திட்ட வரைவைத் தயாரித்துக் கையளிக்குமாறு கோரியதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் ஜெனரல் தயா ரட்நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் அந்த யோசனைத் திட்டத்தைத்தயாரித்து வழங்குவதற்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையில் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜெனரல் தயா ரட்நாயக்க மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir




ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - (தகவல் தொழில்நுட்பம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom

03

மெய்நிகர் வகுப்பறை என்பது எங்கள் ஊர் கல்யாணங்கள் போலத்தான், அறியாத, புரியாத இரண்டு பேரை பெரியவை பேசி தீர்மானிச்சு திடீரெண்டு ஒன்றா சேர்த்து வைப்பினம், அதுகளும் பாவம் ஒன்றையொன்று புரியாமலே குடும்பம் நடத்தத் தொடங்குங்கள். அதுக்குப்பிறகு தான் ஒருவரை ஒருவர் அறிஞ்சு புரிஞ்சு வாழத் தொடங்குவினம். சிலது சுமூகமா வாழுங்கள். பலதுகள் சச்சரவுகளோடையே தொடருங்கள், ஒரு சிலதுகள் அதுக்குப்பிறகு காதலிக்க ஆரம்பிக்குங்கள், மிகச்சிலதுகள் வேண்டாம் போ என்று பிரிஞ்சு போகுங்கள். இந்த நிலை தான் இன்று மெய்நிகர் வகுப்பறைக்கும் என்றால் மிகையாகாது.

கொவிட்- 19 வந்ததால் தவிர்க்கமுடியாமல், விருப்பமில்லலாமல் மாணவர்கள் மெய்நிகர் வகுப்பறைக்கு போயிருக்கிறார்கள். அதுக்குப்பிறகு எங்கட கல்யாணத்தில நடக்கிறது போலத்தான் சச்சரவுகளோட தொடருரது தான் அதிகமா இருக்கு. சென்ற வாரம் மெய்நிகர் வகுப்பறையில் இருந்த உயர்தர வகுப்பு மாணவன் தொடர்ச்சியா ஏழெட்டு மணிநேரமா கொம்பியூட்டரோட இருந்ததால வலிப்பு வந்து வைத்தியசாலைக்கு போக வேண்டியதாயிற்றென்று அறிஞ்சம். ஆனால், என்ன செய்ய மெய்நிகர் வகுப்பறையை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலைதான். ஆனால் அதற்கும் ஒரு வரையறை உண்டு, அதைப்பிறகு பாப்பம். எனினும் நாம் விரும்பியோ விரும்பாமலோ அதனோட தான் சீவிக்க வேண்டும் என்ற நிலை. எங்கட கல்யாணங்கள் போல, அது நிற்க.

மெய்நிகர் வகுப்பறை ஒன்றை உருவாக்க ஆசிரியரும், மாணவரும் மென்செயலி ஒன்றை பதிவிறக்கம் செய்ய வேண்டும் என்று பார்த்தோம், மாணவர்கள், ஆசிரியர்கள் பலவிதமான சாதனங்களிலிருந்து ஒரு மெய்நிகர் வகுப்பறையை அணுகக்கூடும், மேலும் அவர்களின் சாதனத்திற்கு மென்பொருளைப் பதிவிறக்க முடியாமல் போகலாம். இந்தச் சூழலில் என்ன செய்யலாம்? இதற்கு சில மென்பொருள் தளங்கள் இணைய உலாவியில் இருந்து நேரடியாக ஒரு மெய்நிகர் வகுப்பறையைத் தொடங்குவதற்கான வசதிகளை வழங்குகின்றன, அவற்றில் மின்னஞ்சல் ஒன்றின் மூலம் தம்மைப்பதிவு செய்து அந்தத் தளத்தில் மெய்நிகர் வகுப்பறையை உருவாக்க முடியும். ஆனால் பதிவிறக்கம் செய்து உருவாக்கப்படும் மெய்நிகர் வகுப்பறை வசதிகளோடு ஒப்பிடும்போது இணைய உலாவியல் உருவாக்கப்படும் மெய்நிகர் வகுப்பறை வரையறுக்கப்பட்ட அம்சங்களையே கொண்டிருக்குண.

இதனை, இணைய உலாவி அடிப்படையிலான இணைப்பு என்று குறிப்பிடுகிறார்கள். மெய்நிகர் வகுப்பறை மென்பொருளை செயல்படுத்துவதில் மாணவர்கள் மற்றும் பயிற்றுநர்கள் இருவரும் எதிர்கொள்ளும் ஒரு சவால் குறித்த மென்பொருளை தமது கணனியில் பதிவிறக்கம் செய்து நிறுவுதலாகும். ஆதனால் அதிக எண்ணிக்கையிலான தயாரிப்புகள் வலை உலாவியில் இருந்து நேராக இயங்கும் மென்பொருளின் பதிப்புகளை உருவாக்கியுள்ளன. இவற்றைப் பதிவிறக்கம் செய்யத் தேவையில்லை. இது ஒரு புதிய மென்பொருளை பதிவிறக்கம் செய்து நிறுவுவதில் உள்ள சிக்கலை தவிர்க்கிறது. ஒரு மென்பொருளை தமது இலத்திரனியல் சாதனத்தில் நிறுவ முடியாமல் போகலாம், ஏனெனில் சில கணினிகளில் அம்மென்பொருள்களை பதிவிறக்கி, நிறுவல் கோப்புகளை இயக்க தேவையான நிர்வாக அனுமதிகள் இல்லை, அல்லது அவற்றின் சாதனம் மென்பொருளால் ஆதரிக்கப்படவில்லை. உலாவியில் இருந்து இயங்கக்கூடிய மெய்நிகர் வகுப்பறைகள் மாணவர்களுக்கு இந்த தடைகளை கடக்க உதவுகின்றன, குறிப்பாக அவர்கள் பிற பொறுப்புகளை கையாள முயற்சிக்கும் போது மற்றும் விரைவாக தங்கள் மெய்நிகர் வகுப்பிற்கு செல்ல விரும்புகிறார்கள். ஆதற்கு இந்த வகை மெய்நிகர் வகுப்பறைகள் உதவுகின்றன.

ஆக, மெய்நிகர் வகுப்பறை ஒன்றில் இணைவதற்கு, அதனை உருவாக்குவதற்கு மென்பொருள் ஒன்று அவசியம். அதனைப் பதிவிறக்கம் செய்தல் மற்றும் இணைய உலாவியில் பதிவு செய்வதனூடாக பெற்றுக்கொள்ளலாம். இந்த வசதிகளை வழங்குவதற்கு இன்று பிரபலமாக எம்மத்தியில் இருக்கின்ற மென்பொருள் ZOOMசெயலி, இதனைப்போல இருபது மென்பொருள்கள் இன்று காணப்படுகின்றன. அவற்றை இனிவரும் தொடர்களில் விரிவாகப்பார்க்கலாம்.

இவ்வாறு கிடைக்கக்கூடிய ஏதோவொரு மென்பொருளின் உதவியுடன் நுட்பியல் அவத்தையில் உருவாக்கப்படும் மெய்நிகர்வகுப்பறை சிறப்பானதாக இருப்பதற்கு முக்கியமானது. அதில் காணப்படும் நேரடி வீடியோ ஸ்ட்ரீமிங். அதன் தரம் மற்றும் நம்பகத்தன்மை மெய்நிகர் வகுப்பறையை தாக்கவன்மையுள்ளதாக்குகின்றன. குறிப்பாக தொலைதூர மாணவர்களை ஈர்த்து தம்வசம் வைத்துக் கொள்ள முடியும். இந்த வீடியோ கான்பரன்சிங் தளங்களில் பல இப்போது நேரடி வீடியோ ஸ்ட்ரீமிங்கைத் தாண்டி, வகுப்பறைகளில் பல அம்சங்களைக் கொண்டுள்ளன, அதாவது வைட்போர்டுகள் மற்றும் வினாடி வினாக்கள், அரட்டைப்பகுதி, வாக்கெடுப்புகள் போன்றன. ஆகவே ஒரு மெய்நிகர்வகுப்பறையை உருவாக்க விரும்பும் கல்விக்கூடங்கள் தாம் வாங்கும் மென்பொருள் ஒரு பயனுள்ள கற்றல் சூழலை உருவாக்குவதற்கான செயல்பாடுகளைக் கொண்டுள்ளதா? என்பதை முதலில் ஆராய வேண்டும். குறிப்பாக வீடியோ ஸ்ட்ரீமிங் வசதிகளையும் தரத்தையும் நோக்குதல் வேண்டும்.

இதில் வீடியோ மற்றும் ஆடியோ செயல்திறன் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். மெய்நிகர் வகுப்பறை சிறப்பாக அனுபவத்திற்கு இது முக்கியமானதாகும். மெய்நிகர் வகுப்பறையின் மையப் பகுதி பிற பங்கேற்பாளர்களுடன் நேரடி ஓடியோ மற்றும் வீடியோ வழியாக தொடர்பு கொள்ளவதாகும். உயர் தரமான மற்றும் நம்பகமான விநியோகம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பயிற்றுவிப்பாளர்களுக்கோ அல்லது மாணவர்களுக்கோ வீடியோ அல்லது ஓடியோ தொடர்ந்து வெட்டினால்,அதாவது தொடர்ச்சியாகத் தடைப்பட்டால், பாடத்தைப் பின்பற்ற இயலாது. வீடியோ ஸ்ட்ரீமிங் இயங்குதளங்களின் தரம் மற்றும் நம்பகத்தன்மை இரண்டுமே சமீபத்திய ஆண்டுகளில் கணிசமாக மேம்பட்டுள்ள நிலையில், மென்பொருளை வாங்குபவர்கள் மெய்நிகர் வகுப்பறை மெதுவான இணைய இணைப்புகளுடன் எவ்வாறு செயல்படுகிறது என்பதைச் சோதித்துப் பாரத்துக்கொள்ள வேண்டும்.

“மெய்நிகர் வகுப்பறை என்பது எங்கள் ஊர் கல்யாணங்கள் போலத்தான், அறியாத, புரியாத இரண்டு பேரை பெரியவை பேசி தீர்மானிச்சு திடீரெண்டு ஒன்றா சேர்த்து வைப்பினம், அதுகளும் பாவம் ஒன்றை யொன்று புரியாமலே குடும்பம் நடத்தத் தொடங்குங்கள். இந்த நிலைதான் இன்று மெய்நிகர் வகுப்பறைக்கும் என்றால் மிகையாகாது.

# புதிய கல்வி முறைமை அறிமுகப்படுத்தப்படும்!

## ஜனாதிபதி திடசங்கற்பம்



உழைப்பின் கௌரவத்தைப் பாதுகாக்கும் மற்றும் திறமையான சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விரைவான வளர்ச்சியை அடைவதற்கும், குறுகிய காலத்தில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கும் தேசிய கல்விக் கொள்கை ஒன்று ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் ஸ்மார்ட் கற்றல் பல்கலைக்கழகங்களாக மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் அதிக தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் உயர் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு முன்னுரிமை அளிப்பதையும் தாம் எதிர்பார்கிறார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# இராஜகிரியவில் மண்சரிவு இருவர் சிக்கி உயிரிழப்பு!

இராஜகிரிய - கலபலுவாவ - அக்கொன வீதியில் கட்டடமொன்றின் நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடத்திற்கு அண்மையில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வந்த இருவரே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இடம்பெற்ற அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இதில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், மற்றையவரின் சடலத்தை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சாணக்கியனுக்கும் கொரோனா இல்லை!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமிற்கு அண்மையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையைத் தொடர்ந்து சுமந்திரன் மற்றும் சாணக்கியன் உள்ளிட்ட 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த சாணக்கியனுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளவை வருமாறு:-

“எனக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளை அறிவித்திருந்தார்கள்.

இதன்போது எனக்கு தொற்று ஏற்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனக்காகப் பிரார்த்தித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

மீண்டும் சுய தனிமைப்படுத்தலில் இருந்து நேரடி மக்கள் சேவைக்கு வருகின்றேன். மட்டக்களப்பின் நிலைமை தற்போது மோசமடைந்து கொண்டு வருகின்றது. மக்கள் மிகுந்த அவதானமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதிலும் வயது கூடியவர்கள், சிறு பிள்ளைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் நீண்ட காலம் நோய் வாய்ப்பட்டவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.” - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பொங்கல் பானை வைத்து சித்தாண்டியில் போராட்டம்!





மட்டக்களப்பு, சித்தாண்டிப் பகுதியில் கால்நடை வளர்ப்போரால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

உலகெங்கும் தமிழர்கள் கடந்த 15 ஆம்திகதி பட்டிப் பொங்கலை மகிழ்வுடன் கொண்டாடிய அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் வீதிகளில் பொங்கல் பானைகளை வைத்து போராட்டங்களில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பேசுபொருளாக இருக்கும் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் கால்நடை வளர்ப்போர் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சித்தாண்டி சந்தியில் ஒன்றுகூடிய கால்நடை பண்ணையாளர்கள், வீதிகளில் பொங்கல் பானைகளை வைத்து போராட்டத்தை நடத்தினர்.

வாழைச்சேனை - மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்தும் இதன்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தாங்கள் தமது கால்நடைகள் வளர்க்கமுடியாத வகையில் தங்களது மேய்ச்சல் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன எனவும், கால்நடைகள் கொல்லப்படும் சம்பவங்களும் தற்போது இடம்பெறுகின்றன எனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது ஒன்றிணைந்த பண்ணையாளர்கள் தமது நிலம் தமக்கு வேண்டும் என பல கோஷங்களுடன் கண்டனப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அரியநேத்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத் தொழிலாளர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்க குவைத் அனுமதி வழங்கியது!

கொழும்பு, ஜன.18

தொழிலாளர்களை பணிக்கு அனுப்பும் நாடுகளான இலங்கை, பிலிப்பைன்ஸ், இந்தியா மற்றும் ஏனைய இடங்களில் இருந்து புதிதாக ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட உள்நாட்டு உதவியாளர்களை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் நாட்டிற்குள் பிரவேசிக்க குவைத் அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக குவைத் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமது நாட்டுக்கு வரும் வீட்டுத் தொழிலாளர்கள் தங்கள் நாடுகளால் அங்கீகாரம் பெற்ற ஓர் ஆய்வகத்திலிருந்து கொரோனாச் சான்றிதழ் ஆவணம் ஒன்றை வைத்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்துக்கு வரும் பயணிகள் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் சோதனைகளின் முடிவுகள் மறையாக இருந்தால், சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்ப 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்காக நேரடியாக நியமிக்கப்பட்ட இடங்களுக்கு மாற்றப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 நாள்கள் தனிமைப்படுத்தலின் முடிவில் தொழிலாளர்கள் மூன்றாவது பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அதன் பின்னர் முடிவுகள் எதிர்மறையாக இருந்தால் அவர்களின் ஆதரவாளர்களின் வீடுகளுக்குச் செல்லலாம் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், நேர்மறையான முடிவுகளைப் பெறுபவர்களைப் ஏனைய தனிமைப்படுத் தப்பட்ட வசதிகளுக்கு மாற்றுவதற்கு சுகாதார அமைச்சகம் பொறுப்பேற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முரசுமோட்டையில் விபத்து இளைஞர் ஒருவர் மரணம்!

கிளிநொச்சி – முரசுமோட்டை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தர்மபுரம் பகுதியை சேர்ந்த ஞானசேகரம் நிதுசன் என்ற 20 வயதுடைய இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி - பரந்தன், முல்லைத்தீவு வீதி, முரசுமோட்டைப் பகுதியில் இரவு 11.45 மணி அளவில் பரந்தன் பகுதியிலிருந்து சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை டிப்பர் வாகனத்தின் சாரதி அந்த இடத்திலிருந்து தப்பி ஓடியுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆடை விற்பனை நிலையத்தில் கடமையாற்றியவருக்கு தொற்று!

### மன்னாரில் சம்பவம்

மன்னார் பஸார் பகுதியிலுள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் கடமையாற்றியவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

மன்னார் பஸார் பகுதியில் கடந்த புதன்கிழமை காலை வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், வர்த்தக நிலையங்களில் வேலை செய்கின்றவர்கள் என அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டு, மன்னார் புதிய பஸ் நிலைய பகுதியில் வைத்து சுகாதார துறையினரினால் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

முதல் கட்டமாக கிடைக்கப்பெற்ற பரிசோதனை அறிக்கையில் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

மன்னார் பஸார் பகுதியில் உள்ள ஆடை விற்பனை நிலையத்தில் கடமையாற்றும் ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த நபர் தற்போது சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். கடந்த 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை குறித்த ஆடை விற்பனை நிலையத்துக்குச் சென்று மிகவும் நெருக்கமாக நடந்து கொண்ட வாடிக்கையாளர்கள், நண்பர்கள் உடனடியாகத் தமது பிரதேசத்திலுள்ள பொது சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர்களைத் தொடர்பு கொண்டு, தங்களின் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.-என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மேல், சப்ரகமுவ மாகாணங்களில் பனிமூட்டம் நாட்டின் பல இடங்களிலும் மழை நீடிக்குமாம்!

கொழும்பு, ஜன. 18

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேநேரம், மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவுக்கு ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## 12 ஆயிரத்துக்கும் அதிக கைதிகள் டிசெம்பர் மாதம் முதல் விடுதலை!

*கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து இதுவரை 12 ஆயிரத்து 329 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட 26 பெண்களும் 1,100 ஆண்களும் அடங்குகின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.*

*மேலும், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 371 பெண்கள் மற்றும் 10 ஆயிரத்து 832 ஆண்கள் 2020 டிசெம்பர் முதலாம் திகதி முதல் ஜனவரி 16 வரை விடுவிக்கப்பட்டுள்ளனர்.*

*இதேவேளை சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 310 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### பப்பாளி பாலில் இருந்து ஜெலட்டின் உறை

**மாத்திரைகளின் மீது வரும் ஜெலட்டின் உறையைத் தயாரிக்க விலங்கு இறைச்சியில் இருந்து கிடைக்கும் மூலப்பொருளே பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், சில நாடுகளில் ஜெலட்டின் உறையைத் தயாரிக்க விலங்கு இறைச்சி தடை செய்யப்பட்டுள்ளது. அதனால், அந்த நாடுகளில் பப்பாளி பாலில் இருந்து ஜெலட்டின் உறை தயாரிக்கப்படுகிறது. அதற்காகத் தான் நம் நாட்டில் இருந்து பப்பாளிப் பாலை சில வெளி நாடுகள் வாங்குகின்றன.**

**பொதுவாக பப்பாளிப் பாலில் வைட்டமின் ஏ சத்து இருக்கிறது. அத்துடன் பித்தத்தை சீரமைக்கும் பண்பும் பப்பாளிப் பாலில் அதிகம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.**

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**

காலைக்கதிர் Kalaikkathir



# தாயகம், தேசியம், சுயநிர்ணயம் எம் மூச்செனஉரத்து ஒலிப்போம்!

## பொங்கு தினப் பிரகடனத்தின் இருபதாம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

**மீண்டும் ஒருமுறை இந்த வருடமும் சுய நிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் இவையே எமது மூச்சு என மீண்டும் உரத்து ஒலிப்போம். - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.**

யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாகத் திரண்ட பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு இன்று நடைபெற்றது. இதன்போது மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி அழைப்பு விடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் பாக்கியநாதன் உஜாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி மற்றும் மலரஞ்சலி என்பன இடம்பெற்றன.

இதன்போது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் தயாரிக்கப்பட்ட பொங்கு தமிழ் நினைவு நாள் அறிக்கையும் வாசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கட வேண்டும் எனக் கோரிக்கைகளை வலியுறுத்தி 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி இராணுவ அடக்குமுறைக்கு மத்தியில் யாழ் பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாகத் திரண்ட நிகழ்வே பொங்கு தமிழ் ஆகும்.

இதனை நினைவுபடுத்தும் முகமாக அப்போதைய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நினைவுத் தூபியும் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 20ஆம் ஆண்டு நிறைவு நாளான இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டு தமிழ் மக்கள் தங்களது நினைவு உரிமையும் மறுக்கப்பட்ட ஒரு காலப் பின்னணியில் நாங்கள் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூறுகின்றோம்.

2001ஆம் ஆண்டு ஜனவரி 17 இல் தமிழ் மக்கள் தங்களது இன உரிமைகளை வலியுறுத்தி உலகெங்கும் அவற்றை பறைசாற்ற மிகுந்த எழுச்சியோடு இராணுவ அச்சுறுத்தல் மத்தியிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒன்றுகூடினார்கள். அவ்வாறாக அவர்கள் ஒன்று கூடி வந்தபோது மேற்கொண்ட பிரகடனத்தை நாம் இங்கு கல்வெட்டாக வடித்து வருடா வருடம் நினைவு கூருகின்றோம்.

தமிழ் மக்களது அபிலாஷைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்கின்ற விடயங்களை இந்த பிரகடனம் உள்ளடக்கி நிற்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த இந்த பொங்கு தமிழ் உலகின் பல நாடுகளிலும் அங்கங்கு வாழும் தமிழ் மக்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு உலகம் முழுவதற்கும் தமிழ் மக்களது அடிப்படை அபிலாஷைகளை எடுத்துரைத்து வருகின்றது.

யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இந்தப் பொங்கு தமிழ் நிகழ்வும், இங்கு நிறுவப்பட்டிருக்கும் பொங்கு தமிழ் பிரகடன கல்வெட்டும் பறைசாற்றி நிற்கின்றது.

காலாதி காலமாக யாழ். பல்கலைக்கழகம் எடுத்துவந்த தமிழ்த் தேசிய நிலைப்பாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள இக்காலகட்டத்தில் நமது பொங்கு தமிழ் பிரகடன நினைவுகூரல் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆகவே. மீண்டும் ஒருமுறை இந்த வருடமும் சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ்த்தேசியம் இவையே எமது மூச்சு என மீண்டும் உரத்து ஒலிப்போம் - என்றுள்ளது.

---

## கல்விக் கல்லூரியைப் பூர்த்தி செய்த

# 358 ஆசிரியர்கள் வடக்கே நியமனம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.17

கல்வியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறி வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு உட்பட்ட பாடசாலைகளில் நியமனம் பெறும் ஆசிரியர்களில் 358 ஆசிரியர்கள் வன்னிப் பாடசாலைகளிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் விவரம் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்திலே வன்னிப் பகுதியில் நீண்ட காலம் பணியாற்றி யாழ்ப்பாணம் வருவதற்காக நூற்றுக் கணக்காணோர் காத்திருக் கின்றனர். அவ்வாறு உள்ளவர்களை உடன் விடுவிக்கும் சமயம் வன்னியில் உள்ள பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரிய வெற்றிடத்தை நிரப்ப வேண்டிய தேவை உள்ளது.

இதன் அடிப்படையில் தற்போது மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிற்கு நூறு ஆசிரியர்களிற்கு குறையாமலும், வவுனியா மாவட்டத்திற்கு 62 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அதே போன்று கிளிநொச்சி மாவட்டம் மற்றும் கடல் கடந்த தீவுகள் என அனைத்து பின் தங்கிய பிரதேசங்களிற்கும் முன்னுரிமைப் படுத்தலில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற 386 ஆசிரியர்களில் தீவக வலயத்திற்கு 28. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதும் இதில் கடல் கடந்த தீவுகளிற்கு 17 ஆசிரியர்களும், கிளிநொச்சி வலயத்திற்கு 29 ஆசிரியர்கள், மடு வலயத்திற்கு 56 ஆசிரியர்களும், மன்னார் வலயத்திற்கு 54 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று துணுக்காய் கல்வி வலயத்திற்கு 58 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதே போன்று முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு 45 ஆசிரியர்களும், வவுனியா வடக்கு வலயத்திற்கு 39 ஆசிரியர்களும்

வவுனியா தெற்கு வலயத்திற்கு 23 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தை பெறும் ஆசிரியர்கள் அனைவரும் நாளை 18ஆம் திகதி முதல் தமது கடமைகளை எதிர்வரும் 14 தினங்களிற்குள் பொறுப்பேற்க முடியும். இவர்கள் தமது கடமையை பொறுப்பேற்றதும் தற்போது அந்த வலயங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் கோரி அனுமதிக்கப்பட்டவர்கள் அங்கிருந்து விடுவிக்கப்படுவார்கள். - என்றார்.

---

# ஜே.ஆரின் வழியில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம்

## ஐ.தே.க. தலைவர் ரணில் உறுதி



இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியே தீருவோம் என்று முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உட்பட புதிய பதவிகளுக்குத் தெரிவானவர்களைக் கொள்ளுப்பிட்டியிலுள்ள இல்லத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1977களில் பெரும்பான்மையுடன் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பயணத்தையே நாம் தொடர வேண்டியுள்ளது.

அன்று ஜே.ஆர். உடன் இருந்த அனைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லர். என்.ஜீ.பி. பண்டிதரட்ண, எனது தந்தை எஸ்மண்ட் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜீ.பி.சி. சமரசிங்க போன்றவர்கள் சிறந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஆவர்.

மறுபுறம் சிறில் மத்தியூ, ஆர். பிரேமதாஸ, போல் பெரேரா, ஈ.எல். சேனாநாயக, வின்சன்ட் பெரேரா, காமினி மற்றும் லலித் போன்றவர்களும் இருந்தனர். இவர்கள் அனைவருமே நாடாளு மன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

ஆனால், இவர்களை இணைத்துக் கொண்டுதான் 1977ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்தன ஆட்சியைக் கைப்பற்றும் போராட்டத்தைத் தொடங்கினார். எனவே, இவ்வாறான பயணத்தையே நாம் தொடங்க வேண்டியதுள்ளது.

அன்றைய சூழலும் இன்றைய நிலைமையும் வெவ்வேறு என்றாலும் சிறந்த திட்டமிடலே எம்மை வெற்றி இலக்கை நோக்கிக் கொண்டுச் செல்லும்.

எனவே, கட்சியின் வெற்றி இலக்கை நோக்கிய திட்டத்தை தயாரிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள். சாகல ரத்நாயக மற்றும் அனோமா கமகே ஆகியோர் இதற்குத் தலைமை தாங்கி ஆலோசனைகள் பெற்று திட்டத்தை வரைவார்கள்.

மிகக் குறுகிய காலத்தில் தற்போதைய அரசு மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்துள்ளது. எதிர்க்கட்சியும் அதே நிலையில்தான் உள்ளது.

ஹரின் மற்றும் ரஞ்சன் ஆகியோரை ஐக்கிய தேசியக் கட்சி தனிமைப்படுத்திவிடக் கூடாது. அவர்களுக்கு ஏற்படக் கூடிய அநீதிகளின் போது நிச்சயம் குரல் கொடுக்க வேண்டும். தேவைப்படின் நீதிமன்றத்தின் ஊடாகவும் நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார்.

---

## மண்டைதீவிலும் மண்கும்பானிலும்

# காணி சுபிகரிப்புக்கு எதிராக சகலரும் அணிதிரளுங்கள்!



## கஜதீபன் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மண்டைதீவு மற்றும் மண்கும்பான் பகுதிகளில் கடற்படையின் முகாம் அமைப்பதற்காக காணி சுவீகரிப்பு செய்வதை முறியடிக்க அனைவரும் ஒன்றுதிரண்டு போராட வேண்டும் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முப்படையினரின் தேவைகளுக்காக எமது மக்களின் சொந்தக் காணிகள் தொடர்ச்சியாக சுவீகரிக்கப்படுகின்றமை நீடிக்கின்றது.

கடந்த காலங்களிலும் மக்களின் காணிகள் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்ய முற்பட்டபோது மக்களின் கடும் எதிர்ப்பால் அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. எனினும், அதன் தொடர்ச்சியாக மண்டைதீவு மற்றும் மண் கும்பான் பகுதிகளில் மக்களுடைய காணிகள் கடற்படையின் முகாம் அமைப்பதற்காகச் சுவீகரிப்பு செய்வதற்காக அளவீடு செய்யப் படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை மண்டைதீவிலும், மறுநாள் செவ்வாய்க் கிழமை மண்கும்பானிலும் அளவீடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எனவே, எமது மக்களின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிராக நாளை காலை 8.30 மணிக்கு மண்டைதீவிலும், நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு மண்கும்பானிலும் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் அணிதிரண்டு காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.

# உண்ணாவிரதமிருக்கும் கூட்டுறவு உறுப்பினர்களுக்கு உயிராபத்து நேர்ந்தால் அதற்கு ஆளுநரே பொறுப்பு!

## சிறிதரன் எம்.பி. எச்சரிக்கை



(எஸ்.என்.நிபோஜன்)

உண்ணாவிரதம் இருக்கும் கிளி நொச்சி மாவட்ட பனை தென்னை கூட் டுறவாளர் உறுப்பினர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டால் வடக்கு மாகாண ஆளுநரே பொறுப்பு கூற வேண்டும் என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக் கின்



றார்.

கிளிநொச்சி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இறுதியாக இருந்த நிர்வாகத்தை இடை நிறுத்தி ஐந்து பேர் கொண்ட நியமன நிர் வாகத்தை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் நியமித்து தொழிலாளர் களை நெருக்கடிக்குள் உள்ளாக்கியுள் ளது எனத் தெரிவித்து 04.01.2021 கிளி நொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் நியமித்த நியமன இயங்குநர் சபையினை இரத்துச் செய்ய வேண்டும்,தொழிலாளர்களின் வாழ்வா தாரம் அவர்களின் குடும்ப நிலைமைகளை கருதி தற் போதுள்ள இயக்கு நர் சபையை மீளவும் இயங்க விடுதல், சங்கத்தின் கிளைக் குழு தேர்தலை நடாத்தி புதிய இயக்குநர் சபையினை உரு வாக்குதல் போன்ற மூன்று கோரிக்கைகளை வைத்து கடந்த 12.01.2021 தொடக் கம் உண்ணாவிரதம் போராட் டத்தில் இரண்டு தொழிலா ளிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில் நேற்று உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் எம்.பி. கலந்து கொண் டார். அதன் பின்பு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகை யில் –

இவர்கள் தங்களுக்கு இழைக் கப்பட்ட அநீதிக்கு எதிராகக் கிட்டத் தட்ட 500 தொழிலாளர்களுக்கு சார் பாக அவர்களது உற்பத்தியை நிறுத்தி கடைகளை பூட்டி உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொள்கின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக 3 நாள்க ளுக்கு முன் வடக்கு மாகாண ஆளுநரு டன் நான் பேசி இருந்தேன். இன்று காலை யும் இது தொடர்பாக வடக்குமாகாண ஆளுநருடன் பேசிய போது தான் உடன டியாக தனது ஆளணியில் உள்ளவர் களை அனுப்பி நடவடிக்கை எடுப்பார் எனக் கூறி இருந்தார். அன்றைய தின மும் இதை கூறியிருந்தார். ஆனால் அவருடைய பிரதிநிதியாக வந்து இவர் களை யாரும் சந்தித்தனர் என நான் அவர் களிடமிருந்து அறியவில்லை.

இது தொடர்பாக வடக்குமாகாண கூட்டு றவு ஆணையாளர் வாகிசன் அவர்க ளுக்கு எழுத்து மூலமாக இதுவரை 3 கடி தங்கள அனுப்பியுள்ளேன். வடக்கு மாகாண ஆளுநருக்கு 4 கடிதங்கள் அனுப்பி உள்ளேன். அத்துடன் மாவட்டக் கூட்டுறவு ஆணையாளருக்கும் கடிதங் கள் அனுப்பி உள்ளேன்.

இவர்கள் அனைவரும் மக்களின் உயிர்களோடு விளையாடிக் கொண்டிருக் கிறார்கள். உண்ணாவிரதம் இருப்பவர்க ளில் ஒருவர் பேசுகின்ற சக்தியை இழந்து இருக்கின்றார்.

உண்ணாவிரதம் இருப்பவர்களின் கோரிக்கைகள் நியாயமானவை. ஜன நாயக முற்சியிலானவை. இவற்றை நிரா கரித்தால் அல்லது இவர்களுக்கு ஏதா வது உயிர் ஆபத்து ஏற்பட்டால் வடக்கு மாகாண ஆளுநரும் அந்த கூட்டுறவு துறைக்கு பொறுப்பாக இருப்பவர்களுமே பதில் சொல்ல வேண்டும். – என்று குறிப் பிட்டார்.

### இணை அனுசரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக செயலாற்றிவரும் முக்கிய நாடுகளது குழுவினர் இணை அனுசரணை வழங்குமாறு இலங்கை அரசிடம் விடுத்திருந்த வேண்டுகோள் நிராகரிக்கப் பட்டுள்ளது என அறியமுடிகின்றது .

இலங்கை தொடர்பாக செயலாற்றிவரும் முக்கிய நாடுகள் குழுவில் பிரிட்டன், கனடா, ஜேர்மனி, வடக்கு மஸிடோனியா மற்றும் மொன்டிநீக்ரோ ஆகியன இடம் பெற்றுள்ளன.

புதிய பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள வரை வுகள் சமரசமுடையனவாகக் காணப்படுகின்றன என்று சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடும் அதே வேளை, இலங்கையின் வெளிவிவகார செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே இணக்கப்பாடுடைய பிரேரணையைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறுகின்றார்.

இணக்கப்பாடுடைய பிரேரணைக்கு உடன்படுவது இலங்கை அரசைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாக சவால் மிக்கது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் அரசமைப்புக்கும் இறையாண்மைக் கும் மக்களுக்கும் எதிரானது என்பதால் ஜெனிவாத் தீர் மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமை ஓர் அரசைப் பதவியிலிருந்து அகற்றும் நிலைமைக்கு வழிகோலியிருந்தது. இணக்கப்பாடுள்ள தீர்மானம் என்றாலும் அது நடக்குமா? இல்லையா? என்று கூற முடியாது . ஆனாலும், அதுவும்கூட அரசுக்குப் பெரும் சவாலாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பிரித்தானியாவின் புதிய வைரஸுக்கு ஒத்ததே இலங்கையிலும் பரவுகிறது!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று மிக மோச மாக பரவிக்கொண்டுள்ள நிலையில் அரசாங்கம் நாட்டை திறக்கும் நடவடிக்கைகள் ஆரோக்கியமானவை அல் லவென தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள பொது சுகாதார அதிகாரிகள் சங்கம் இலங்கையில் தற்போது பரவும் வைரஸ் பிரித்தானியாவில் பரவும் வைரஸ் இல்லையென்ற போதிலும் அதற்கு ஒத்த வைரஸே பர விக்கொண்டுள்ளதாகவும் கூறுகின்றது.

நாடளாவிய ரீதியில் வைரஸ் தொற்று பரவியுள்ள காரணத்தால் எந்த பகுதியை முடக்குவது, எங்கு பாது காப்பாக உள்ளதென அறிவிக்கவோ தீர்மானம் எடுக் கவோ முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் கொரோனா வைரஸ் இன்னமும் சமூக தொற்றாகவில்லை என அரசாங்கமும், சுகாதார அமைச்சும் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்ற போதி லும் நாட்டில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தொற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின் றனர்.

இந்நிலையில் நாட்டின் நிலைமைகள் தொடர்பாகப் பொது சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் றோகணவிடம் வினவியபோது அவர் கூறியவை வரு மாறு:-

நாட்டில் சகல பகுதிகளிலும் கொரோனா வைரஸ் தொற்றுநோய் உள்ளது, இப்போது நாட்டில் அதிகள வான வைரஸ் தொற்றாளர்கள் அடையாலம் காணப் பட்டு வருகின்றனர் என்றால் நாட்டில் வைரஸ் பரவல் அதிகம் என்பதே அதன் அர்த்தமாகும்.

இது சமூக தொற்றா அல்லது கொத்தணிகளா என் பது விவாதமல்ல, வைரஸ் தொற்று வேகமாக பரவிக் கொண்டுள்ளது. இதற்கு காரணம் என்னவெனில் அவ சியமான நேரத்தில் நாட்டை முடக்காது சகல பகுதிகளும் திறக்கப்பட்டமையே சகல நெருக்கடிக்கும் காரண மாகும்.

அரசாங்கம் சகல பகுதிகளையும் திறந்தவுடன் மக் கள் பொறுப்பு, கட்டுப்பாடுகள் சுகாதார வழிமுறைகள் என எதனையும் கருத்தில் கொள்ளாது அநாவசிய மான செயற்பாடுகளில் ஈடுபட்டதன் விளைவே இப்போது அளவுக்கு அதிகமான கொரோனா வைரஸ் தொற்றா ளர்கள் அடையாளம் காணவும் காரணமாக அமைந் துள்ளது.

அதேபோல் எதிர்வரும் 21ஆம் திகதியுடன் விமான நிலையம் முழுமையாகத் திறக்கப்படவுள்ளது, சுற்றுலா பயணிகளை நாட்டுக்குள் அனுமதிக்கவுள்ளனர், ஒரு நாளைக்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமான சுற் றுலாப் பயணிகளை அனுமதிக்க தீர்மானம் எடுத்துள்ள தாக கடந்த செயலணிக் கூட்டத்தில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

எது எவ்வாறு இருப்பினும் பிரித்தானியாவில் காணப் படும் மாறுபட்ட வைரஸ் பரவல் ஆசியா உள்ளிட்ட 20 நாடுகளில் தற்போது பரவியுள்ளது. அவ்வாறு இருக் கையில் இலங்கையிலும் இப்போது பரவும் வைரஸ் வழமையாக இதுவரை காலமாக இலங்கையில் காணப் பட்ட வைரஸ் அல்லாது பிரித்தானியாவில் காணப்படும் வைரஸுக்கு ஒத்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

எனவே அரசாங்கம் இப்போது எடுக்கும் தீர்மானங் களில் எமக்கு உடன்பாடுகள் இல்லை. இப்போது நாம் தவறிழைப்பது மீண்டும் நாட்டை முழுமையாக முடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

அதேபோல் இறுதியாக கூடிய கொவிட் செயலணிக் கூட்டத்தில் பொது சுகாதார அதிகாரிகள் சங்கம் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கங்கள் அரசாங்கத் துடன் கடுமையான கருத்து முரண்பாடுகளில் ஈடுபட் டுள்ளன.

அரசாங்கம் தற்போது எடுக்கும் நடவடிக்கைகள் நாட்டுக்கு உகந்ததல்ல என்பதை சுட்டிக்காட்டியுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நிலைமைகள் இவ்வாறே செல்லுமானால், சுகாதார அதிகாரிகளுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தடுக்கப்பட்டு இராணு வம் சகல விடயங்களிலும் தலையிடும் என்றால் தாம் செயலணிக் கூட்டத்தில் இருந்து வெளியேறவும் தயங்க மாட்டோம் எனவும் அவை தெரிவித்துள்ளன.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

# ‘அதானி - அம்பானி’ நிறுவனத்துக்கு எதிராக இலங்கையிலும் போராட்டம்!

விவசாயிகளின் உரிமைக்காகவும், காணி சட்டத்தை திருத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை கண்டித்தும் விவசாயிகள் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள் ளனர்.

இந்தியாவில் அதானி – அம்பானி நிறுவனங்கள் விவசாய நிலங்களை சூறையாடிக்கொண்டுள்ளதாக தெரிவித்து இந்திய விவசாயிகள் நீண்ட நாள்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அதனை அடிப்படையாகக் கொண்டே இலங்கையிலும் விவசாயிக ளின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக விவசாயிகள் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் காணி சட்டத்தில் முக்கிய மூன்று திருத்தங்கள் செய்யப்பட்டுள்ள மையை அடுத்தே இந்திய விவசாயிகள் போராட்டத்தை நடத்திக்கொண்டுள்ள நிலையில் அடுத்ததாக இந்த ஆக்கிர மிப்புகள் இலங்கையிலும் இடம்பெறும் எனவும், அதானி நிறுவனம் இப்போதே இலங்கை துறைமுகத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில் அடுத்ததாக இலங்கையில் விவசாய காணிகள் தனி யார் நிறுவனங்கள் வசமாகவுள்ளன என வும் விவசாயிகள் அமைப்புகள் தெரிவித் துள்ளதுடன் இலங்கை அரசாங்கமும் காணி சட்டத்தை திருத்தவுள்ளதால் அதனை எதிர்த்தும் போராடவுள்ளதாகக் கூறுகின்றனர்.

நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ள நிலையில் கொவிட்–19 தொற்றுநோய் காரணமாக இவ்வாறான ஆர்ப்பட்டங்களுக்கும் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

எனினும் தாம் இந்திய தூதரகத்துக்கு முன்பாக தமது எதிர்ப்பு போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடு களை செய்து வருவதாகவும் அந்த அமைப்பினர் கூறுகின்றனர்.

# இந்தியாவில் கொரோனா தடுப்பு மருந்து வழங்கல்!

## இலங்கைப் பிரதமர் பாராட்டு

இந்தியாவில் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளமையை கொரோனா வைரஸின் முடிவின் ஆரம்பமாகக் கருதுவதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இந்தியா கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை வழங்கும் பாரிய நடவடிக்கையை ஆரம்பித்துள்ளமை தொடர்பாக இந்தியப் பிரதமருக்கு இலங்கை பிரதமர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

மிகவும் முக்கியமான கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தைச் செலுத்தும் பெரும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளமை தொடர்பாகத் தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்திய பிரதமருக்கும் மக்களுக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இந்திய விஞ்ஞானி களினதும் முன்னிலை பணியாளர்களின தும் அயராத முயற்சிகள் கொரோனா வைரஸிற்கு எதிரான போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளன என இந்தி யப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பிரதமரின் பாராட்டு செய் திக்கு நன்றி தெரிவித்து ருவிட்டரில் வெளி யிட்டுள்ள செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை வேகமாகத் தயாரித்து, மருந்தை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது ஆரோக்கி யமான நோய் இல்லாத உலகத்துக்கான தங்கள் கூட்டு முயற்சியில் மிக முக்கிய மானது எனவும் மோடி பதிவிட்டுள்ளார்.

# கொரோனாவிலிருந்து 425 பேர் குணமடைவு!

நாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேலும் 425 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 45 ஆயிரத்து 171 ஆக உயர்வடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சுகாதார விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு; 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டோர் கைது!

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் இதுவரையில், 2 ஆயிரத்து 578 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

குறிப்பாக கடந்த 24 மணிநேரத்தில் மாத்திரம் இந்தக் குற்றச்சாட்டுகளுக்காக 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் வழங்கியுள்ள ஆலோசனைகளைத் தொடர்ந் தும் கடைபிடிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் வலியுறுத்தியுள்ளனர்.

# வவுனியாவில் முடக்கப்பட்டுள்ள சில பகுதி இன்று வழமைக்கு!

வவுனியாவில் முடக்கப்பட்ட சில பகுதிகள் இன்று முதல் வழமை நிலைக்குத் திரும்புகின்றமையுடன் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் திறக் கப்படவுள்ளன என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துல சேன தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் முடக்க நிலைமை தொடர்பில் அவரிடம் ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் –

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்த கொரோனா தொற்றாளர்களின் எண் ணிக்கையையடுத்து கடந்த 12 ஆம் திகதி மாவட்ட செயலகக் கேட்போர் கூடத் தில் கொவிட்19 அவசர கால நிலைமை கள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்று மாவட்டத்தின் சில பகுதி களை 24 ஆம் திகதி வரை தனிமைப் படுத்துவதாகத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது.

அதன்படி வவுனியா நகருக்குள் பிரவேசிக்கும் பகுதிகளான நெளுக்குளம் சந்தி, தாண்டிக்குளம் சந்தி, மாமடுவ சந்தி, பூந்தோட்டம் சந்தி, கண்டி வீதி இரா னுவ முகாம் சந்தி ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதிகள் தனிமைப்படுத் தப்பட்டிருந்தன.

இந் நிலையில் வவுனியா பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தைச் சுற்றுவட்ட வீதி போன்றவை தவிர்ந்த ஏனைய தனிமைப்படுத்தப்பட்ட இடங்கள் இன்று திங்கட்கிழமை வழமைக்கு திரும்புகின் றமையுடன் வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளும் ஆரம்பிக் கப்படவுள்ளன.

ஆகவே பொதுமக்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமா கப் பின்பற்றி நடந்து கொள்ளுமாறும் அவர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

CNR world wide Express
Courier & Cargo
International Courier & Cargo Service.
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தர வாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும்வசதி.
அனுப்பும் பொதிகளை இணைய தளத்தில் கண்காணிக்கும் வசதி.

இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

# தனிமைப்படுத்தலில் இருந்துவந்த சில பகுதிகள் விடுவிக்கப்பட்டன!

நாட்டின் சில பகுதிகள் உடன் அமு லுக்குவரும்வகையில் தனிமைப்படுத்த லில் இருந்து நீக்கப்படுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்ச் சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அதன்படி களுத்துறை – இந்துவர பகுதியின் துன்தூவ கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப் படுத்தலில் இருந்து நீக்கப்படுகின்றன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுவரையில் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பேருவளை பகுதியில் 9 கிராம சேகவர் பிரிவுகளும், பாணந்துறை பகுதியில் ஒரு கிராம சேவகர் பிரிவும், களுத்துறை பகுதியில் 20 கிராம சேவகர் பிரிவுகளும் நேற்று தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்படுகின்றன எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1975.05.16 | பிறந்த திகதி - 1975.12.11 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - பூசம் | நட்சத்திரம் - புனர்பூசம் |
| செவ் - ------ | செவ் - --- |
| பாவம் - 28 1/2 | பாவம் - 26 1/4 |
| கல்வி - A/L | கல்வி - BA பட்டதாரி |
| தொழில் - மிருக வைத்தியம் | தொழில் - ஆசிரியை |
| எதிர்பார்ப்பு - அரச தொழில் | எதிர்பார்ப்பு - அரச தொழில் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக் களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங் களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம் |
| சங்கானை | பளை | மல்லாவி |
| கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார் |
| ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா |
| நெல்லியடி | முல்லைத்திவு | கொழும்பு |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.01.2021 இல் வெளியிடப்பெற்றது.

# உயர்தர பெறுபேறு ஏப்ரலில் வெளியாகும்; பல்கலைக் கழக அனுமதி செம்ரெம்பரில்!

2020 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரலில் வெளியிடப்படவுள்ளன என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மல்வத்து அஸ்கிரிய தேரரை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில், பல்கலைக் கழகத்துக்குத் தகுதிபெறும் மாணவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியைப் பெறுவரெனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச்சில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் இதற்கான பெறுபேறுகளை ஜூனில் வெளியிட நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன எனவும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

# 2 லட்சம் கொரோனா தடுப்பூசி இந்தியாவிலிருந்து கிடைக்கும்!

அடுத்த இரண்டு வாரங்களில் இந்தியாவில் இருந்து இரண்டு லட்சம் ஒக்ஸ்போர்ட் - ஆஸ்டாசனிக் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளமையுடன், உலக சுகாதார ஸ்தாபனமும் ஒரு லட்சம் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்குவதாக அரசாங்கத்திடம் அறிவித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் சுற்றுலா பயணிகளுக்காக நாடுதிறக்கப்படவுள்ள நிலையில் நாட்டுக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை எனவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவரும் செயற்பாடுகள் மற்றும் சுற்றுலாத்துறைக்காக மீண்டும் நாடு திறக்கப்படுகின்றமை தொடர்பாக சுகாதார அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

உலக சுகாதார ஸ்தாபனத்துடன் நாம் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைக்கு அமைய இலங்கைக்கு கொரோனா வைரஸ்தடுப்பூசிகளைவழங்கும்வேலைத் திட்டத்தில் உலக சுகாதார ஸ்தாபனம் பூரண இணக்கத்தை ஏற்கனவே தெரிவித்திருந்தது.

அதற்கமைய உலக நாடுகளுக்கு வழங்கப்படவுள்ள கொரோனா வைரஸ் தடுப்பூசிகளில் இலங்கைக்கும் முதற் கட்டமாக ஒரு லட்சம் தடுப்பூசிகளை வழங்கவுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

அதற்கமைய பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் எமக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலம் வழங்கும் ஒரு லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கும்.

அதேபோல் இந்தியா தற்போது 20 மில்லியன் ஒக்ஸ்போர்ட் - ஆஸ்டாசனிக் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை தமது நேச நாடுகளுக்கு வழங்க தீர்மானித்துள்ள நிலையில் இலங்கைக்கும் இந்தத் தடுப்பூசிகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இரண்டு லட்சம் தடுப்பூசிகள் அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கைக்கு கிடைக்கும். அதன் பின்னர் மேலதிகமாக எம்மால் கொள்வனவு செய்து கொள்ளவும் முடியும். இலவசமாக இவை கிடைக்கவில்லை, அதற்கான நிதியை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டியுள்ளது.

அவசியத்தை பொறுத்தே அடுத்த கட்டத்தில் எவ்வளவு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வது என்பது தீர்மானிக்கப்படும்.

அதேபோல் விமான நிலையம் திறக்கப்படுவதால் நாட்டுக்குள் எந்த பாதிப்பும் வரப்போவதில்லை, இப்போது எவ்வாறு சுகாதார வழிமுறைகளுடன் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனரோ அதேபோல் எதிர்காலத்திலும் சுற்றுலாப்பயணிகள் வருவார்கள்.

குறிப்பாக ஒரு நாளைக்கு மூவாயிரம் சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்குள் வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் பிரித்தானிய சுற்றுலாப்பயணிகள் தவிர்ந்து ஏனைய நாட்டவர்கள் வர முடியும் எனவும் அவர் கூறினார்.

# விமான நிலைய சுற்றுலாப் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் இனி இல்லை!

நாட்டின் நிலைமைகள் சீராக உள்ளதை சுகாதார அமைச்சு மற்றும் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவினர் உறுதிப்படுத்தி யுள்ள நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதியில் இருந்து விமான நிலையத்தை முழுமையாகத் திறக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், விமான நிலையத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட மாட்டாது என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், விமான நிலையத்தை விட்டு 90 நிமிடங்களில் சுற்றுலாப் பயணிகள் வெளியேறி தாம் பதிவுசெய்துள்ள விடுதிகள், வாடி வீடுகள் ஆகியவற்றுக்குச் செல்லமுடியும் எனவும் சுற்றுலாப் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்ளாத வண்ணம் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஒரு நாளைக்கு மூவாயிரம் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிக்கவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேபோல், வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வர விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த நாடுகளில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு தமது உடல் தகுதியை உறுதிப்படுத்தியே இலங்கைக்கு வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரித்தானியாவில் இருந்து எவரும் இலங்கைக்கு வர முடியாது எனவும், பிரித்தானியாவில் இருந்து வரும் விமானங்களை இலங்கையில் தரையிறக்க அனுமதிக்க மாட்டோம் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவமும் பொலிஸும் நேற்று ஆலையடிவேம்பில் திடீர்த் தேடுதல்

(செல்வி வினாயகமூர்த்தி)

அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று 8/2 பிரிவில் நேற்றுக் காலை இராணுவத்தினரும் பொலிஸாரும் கூட்டாக இணைந்து விசேட சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

அதிகாலை முதல் இப்பகுதியில் 50 மேற்பட்ட இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

காலை 6 மணிமுதல் திடீரென பொதுமக்களின் வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினர் குடும்ப அங்கத்தவர்களின் விவரங்களை கேட்டறிந்தமையுடன் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, தகவல்கள் பெறப்பட்டவர்களிடமிருந்து ஒப்பங்களும் வாங்கப்பட்டன.

அதிகாலையில் திடீரென இடம்பெற்ற இச்சோதனை தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் குழப்பமும் அச்சமும் நிலவின.

# இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் பெண் சிக்கினார்

## அவரிடமிருந்து ஆறு இலட்சம் ரூபா பணமும் மீட்பு

கொழும்பு, பொரளை - சிரிசரவுயன குடியிருப்புத் தொகுதியில் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஆறு இலட்சத்துக்கும் அதிக பணத்துடன் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப்பொருளுடன் இந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குடியிருப்புத் தொகுதியின் ஐந்தாம் மாடியில் உள்ள வீடொன்றைச் சோதனை செய்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், அங்கு காணப்பட்ட அலுமாரியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 638 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஆறு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இதனையடுத்தே 59 வயது பெண்ணைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர். - என்றார்.

# யாழுக்கு முதலில் கொரோனாவை சுமந்து வந்தவர் சுவிஸில் மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.18

சுவிஸ் நாட்டில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு 2020ஆம் ஆண்டு கொரோனாவுடன் வருகை தந்தார் என்ற சர்ச்சைக்குள் அகப்பட்ட மத போதகர் நேற்று முன்தினம் சுவிஸ் நாட்டில் காலமானார்.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து மீண்டும் 18ஆம் திகதி சுவிஸ் நாட்டிற்கு திரும்பிய மதபோதகர் சற்குண ராஜாவிற்கு கொரோனாத் தொற்று இருந்தமை சுவிஸ் நாட்டில் கண்டறியப்பட்டது. யாழ்ப்பாணத்தில் போதகருடன் பழகிய அடிப்படையில் தாவடியைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் ஒருவருக்கு காய்ச்சல் காணப்பட்டபோது 2020.03.21அன்று யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதனால் தாவடி கிராமமே முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டபோது போதகர் பெயர் அதிகம் உச்சரிக்கப்பட்டது. அதேநேரம் போதகர் நடமாடிய அரியாலையின் சில பகுதிகளும், போதகரால் மேற்கொள்ளப்பட்ட ஆராதனையில் பங்கு கொண்டோருடன் தனிமைப்படுத்தப்படும் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு கடந்த ஆண்டு மார்ச், ஏப்பிரல் மாதங்களில் அதிகம் உச்சரிக்கப்பட்ட போதகர் தற்போது சுவிஸ் நாட்டில் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பூநகரியில் கொடூரம்

# 3 பிள்ளைகளின் தாய் குத்திப் படுகொலை!

## சந்தேகத்தில் கணவர் கைது



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், பூநகரிப் பகுதியில் நேற்று மாலை குடும்பப் பெண்ணொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெளிகரை பகுதியில் மூன்று பிள்ளைகளின் தாய் படுகொலை செய்யப்பட்ட நிலையில் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

தெளிகரையில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்தே அந்தப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

வயிற்றுப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட பெண் 37 வயதுடை ரூபஸ் கிருஷ்ண குமாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்ப இடத்திலிருந்து கூரிய ஆயுதமும் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணைகளை பூநகரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பாண் மற்றும் பணிஸ் விலைகள் அதிகரிப்பு!

பாண், பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளின் விலை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது.

பேக்கரி உற்பத்திகளுக்கான மூலப் பொருள்களின் விலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பால், பாண், பணிஸ் உள்ளிட்டவை குறைந்தபட்சம் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

பாம் எண்ணெய்க்கு ஒரு லீற்றருக்கு 250 ரூபா வரி அறவிடப்படும் நிலையில், அதன் விலை 500 ரூபாவாகவும், மாஜரின் ஒரு கிலோவுக்கு 600 ரூபா வரி அறவிடப்படும் நிலையில் 1000 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளதால் பேக்கரி உற்பத்திகளின் விலையை அதிகரிக்காமல் இருப்பது சாத்தியமற்றது என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பேக்கரி பண்டங்களின் விலையை அதிகரிக்காமல் இருக்க, சலுகைகளை வேண்டி ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கோரிக்கைகளை முன்வைத்த போதும் அவர்கள் அதற்கான எந்த பதில்களையும் இதுவரை வெளிப்படுத்தாமையால், பேக்கரி பண்டங்களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக, பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன சுட்டிக்காட்டினார்.